புதிய பாடத்திட்டம்

Selvi-N A/L 99 M.S.C By. Kalaichelvan.

ADVANCED ACCOUNTING

உயர்கணக்கீடு

1997

க. பொ. த (உயர்தர) பரீட்சை

கணக்கீடு (புதிய பாடத்திட்டம்)

வினா, விரிவான விளக்கக் குறிப்புடன் விடைகள்

குமாரசுவாமி கலைச்செல்வன்

657 கலைச் SL IPR

ADVANCED ACCOUNTING

உயர்கணக்கீடு

1997

க.பொ.த. உயர்தர பரீட்சை வினாவிடை
(விரிவான விளக்கங்களுடன்)

விற்பனையாளர்
Lanka Book Depot
FL. 1.14 Dias Place, Gunasingapura, Colombo - 12.
Telephone : 341942

Subject	-	Accountancy
Title	-	1997, G.C.E. (A/L) Examiniation August Question & Answer with Explanation
No.of Copies	-	2000
Edition	-	1st Edition 1997 August
Author	-	K . Kalaichellvan
Residence	-	480/101, Roxy Garden, Colombo - 6.
Copy right	-	Author
Typesetting & Printing	-	Admiral Graphics No :403 1/1Wellawatta, Colombo 06. Tel : 596764-6
Publisner	-	K. Anpallakan Mod Study Centre Welawatha. Telephone : 716205

முகவுரை

1997 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சை கணக்கீடு (புதியபாடத்திட்டம்) பாடத்திற்கான வினாக்களுடன், அதற்கான விரிவான விளக்கக் குறிப்புக்களையும். விடைகளையும் உள்ளடக்கியதாக இந்நூலை வெளியீடு செய்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன

நடைபெற்ற இப்பாடத்திற்குரிய வினாத்தாளில் காணப்பட்ட மொழி பெயர்ப்புத் தவறுகளை இனங்கண்டு, மாணவர்கள் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில், பல திருத்தங்களுடன் செய்கை முறைகளையும் இணைத்து தெளிவான விடைகளை உள்ளடக்கியதாக, இந்நூல் வெளியாகிறது.

வினாத்தாளின் மூலப் பிரதி விடைக்குறிப்பு அனைத்தையும் நன்கு ஒப்பிட்டு நோக்கிய பின் பரீட்சைத்திணைக்களத்தின் நோக்கங்களுக்கு முரணாகதவகையில் அனைத்துத் திருத்தங்களும், இடைச் சேர்க்கைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆக்கத்திற்கு ஆலோசனையினையும் தூண்டுதல்களையும் வழங்கிய திரு. ஜே. சகாயநாதன் (ஆசிரிய ஆலோசகர் மட்டக்களப்பு மாவட்டக் கல்வித்திணைக்களம்) திரு. ஜ. பி. சாதரூபன் (கண்டி புனித சில்வஸ்ரர் கல்லூரி) ஆகியயோருக்கும், வெகுவிரைவில் புத்தகம் வெளிவர உதவிய அட்மிரல் நிறுவனத்தாருக்கும், உழியர்களுக்கும், பிரதிகளை ஒழுங்குபடுத்தி வடிவமைத்த யாழ். பருத்தித்துறை ஹட்லிகல்லூரி உயர்வகுப்பு மாணவர்களகிய செல்வன் கோகுலரமணன் செல்வன் இ. விஜயகுமார். ஆகியோருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

தொடர்புகள்:
K. Kalaichellvan
D. S. Senanayake College,
Colombo - 07.
Phone : 591837

திரு. கு. கலைச்செல்வன
நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்றுறை,
யாழ்ப்பாணம்.

பொருளடக்கம்

பகுதி I			பக்கம்
வினா இலக்கம்	1	---	1 - 01
"	2	---	1 - 13
"	3	---	1 - 22
"	4	---	1 - 26
"	5	---	1 - 32
"	6	---	1 - 41

பகுதி II			
வினா இலக்கம்	1	---	1 - 47
"	2	---	1 - 55
"	3	---	1 - 60
"	4	---	1 - 64
"	5	---	1 - 68
"	6		1 - 74

பகுதி I

முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக. ஒவ்வொரு விடையுடனும் பொருத்தமான செயன்முறைகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

(1)

(அ) பங்குடைமையில் அணில், பஸில், சிஸில் ஆகியோா் இலாப நட்டங்களை முறையே 3:2:1 எனும் விகிதப்படி. பங்கிட்டுக் கொள்கின்றனா். பங்குடைமையின் 1996.03.31 ஆந் திகதி இருந்தபடியான ஐந்தொகை கீழே தரப்பட்டுள்ளது.

	ரூபா		ரூபா	ரூபா
மூலதனக் கணக்கு		நிலையான சொத்து		
அணில்	250000	கிரயத்தில் பொறித் தொகுதி	350000	
பஸில்	250000	கழிக்க :		
சிஸில்	125000	திரண்ட தேய்மானம்	(100000)	250000
நடைமுறைக் கணக்கு		மோட்டார் வாகனமும் கருவிகளும்	270000	
அணில்	10000	கழிக்க : திரண்ட தேய்மானம்	170000	100000
பஸில்	24000			350000
சிஸில்	16000	நடைமுறைச் சொத்துக்கள்		
வியாபாரக் கடன்கொடுத்தோர்	100000	இருப்பு	200000	
நின்ற கொடுக்குமதிகள்		கடன்பட்டோர்	180000	
தொலை பேசி 5000		வங்கிமீதி	60000	440000
மின் கட்டணம் 10000	15000			
	790000			790000

மேலதிக தகவல்கள் :

1. 1996.04.1 இல் பஸில் பங்குடைமையிலிருந்து ஒய்வுபெற ஏனைய பங்குதாரா்களால் டேவிட் என்பவா் பங்குடைமையில் ரூபா 200000ஐச் செலுத்திப் பங்காளராக சோ்த்துகொள்வது ஏற்றக்கொள்ளப்பட்டது. இத் திகதியிலிருந்து பங்காளா்கள் இலாப நட்டங்களைச் சமமாகப் பகிா்ந்துகொள்ளத் தீா்மானித்தனா். இந்தப் புதிய இலாப நட்ட விகிதத்துக்கேற்ப சிஸில் பங்குடைமைக்கு மேலதிக மூலதனமாக மேலும் ரூபா 50000ஐச் செலுத்திட இணங்கினான்.

2. பஸில் ஓய்வுபெற்ற பிறகு பங்குடமையின் எல்லா சொத்துக்களும் மறு மதீப்பீடுசெய்யப்பட்டன. கிழ்வரும் புதிய பெறுமதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

	ரூபா
பொறித்தொகுதி	300000
மோட்டர் வாகனமும் கருவிகளும்	150000
கடன்பட்டோர்	158000

இருப்பு ஒரு நியாமான பெறுமதிக்கு கணக்கில் காட்டப்பட்டுள்ளமை ஏற்கப்பட்டது.

3. 1996.03.31 இல் உள்ளவாறு பங்குடைமையின் நன்மதிப்பு ரூ.120.000 இற்கு மதிப்பிடப்பட்டது. நன்மதிப்புக் கணக்கு புத்தகங்களில் பேணப்படமாட்டாது. ஆனால் பொருத்தமான செம்மையாக்கங்கள் பங்காளர்களின் மூலதனக் கணக்கினுடாக செய்யப்படவேண்டும்

4. ஒய்வுபெறுகையில் பஸிலுக்கு ரூபா 150000 பணத்தொகை கொடுக்கப்பட்டதோடு, ரூபா 100000 இற்கு மறு மதீப்பீடு செய்யப்பட்டமோட்டர் வாகனமொன்றையும் அவருக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகையின் பகுதிக்கு எடுத்தக்கொள்ள பஸில் அனுமதிக்கப்பட்டார். பஸில் மிகுதியாக தனக்கு தரப்படவேண்டிய தொகையை ஆண்டொன்றுக்கு 10% வட்டியைத் தருகிற நீண்டகாலக் கடனாக பங்குடைமையில் வைத்திருக்கச் சம்மதித்தார்.

5. 1997.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான புதிய பங்குடைமைக் கணக்கிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட விபரங்கள் கீழே தரப்படுகினறன.

1. 1997.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசு பெறுவனவு கொடுப்பனவுகள் பற்றிய விபரம் வருமாறு

	ரூபா
மூலதனத்துக்கான பெறுவனவுகள் - டேவிட்	200000
- சிஸில்	50000
வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவுகள்	900000
வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள்	480000
ஏனைய செலவுகள்	111000
தொலைபேசி. மின் கட்டணச் செலவுகள்	55000
எடுப்பனவுகள் - அனில்	10000
- சிஸில்	8000
- டேவிட்	5000
கொடுப்பனவுகள் - பஸிலுக்கு	150000

2. 1997.03.31 ஆந் திகதி இருந்தபடி வியாபாரக் கடன்பட்டோரினதும் கடன்கொடுத்தோரினதும் தொகை முறையே ரூபா 58000 ரூபா 20000 ஆகும்

3. 1997.03.31 ஆந் திகதி இருந்தபடி நின்ற செலவுகள் - தொலைபேசிக் கட்டணம் ரூபா 8000, மின் கட்டணம் ரூபா 12000 ஆகியவற்றை உள்ளடக்கியது.

4. கையிருப்பு 1997.03.31 இல் ஆந் திகதியன்று இருந்தபடி ரூபா 150000

5. பொறித் தொகுதியும் மோட்டர் வாகனங்கள் கருவிகளும் அவற்றின் மறுமதிப்புத் தொகைமீது ஆண்டொன்றுக்கு முறையே 25% உம் 10% உம் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

பின்வருவனற்றைத் தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகின்றீர்

1. 1996.04.01 இல் உள்ளவாறான மறு மதீப்பீட்டுக் கணக்கு (4 புள்ளிகள்)
2. நிரல் வடிவில் பங்குதாரர்களின் மூலதனக் கணக்கு (7 1/2 புள்ளிகள்)
3. 1997.03.31 இல் முடிந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு (9 1/2 புள்ளிகள்)
4. 1997.03.31 இல் முடிந்த ஆண்டுக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு (2 1/2 புள்ளிகள்)
5. 1997.03.31 ஆந் திகதியன்று இருந்தபடி ஐந்தொகை (1 1/2 புள்ளிகள்)

(35புள்ளிகள்)

(ஆ) "ஞாபன மறு மதிப்பீட்டுக் கணக்கு" என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு இக்கணக்கை தயாரிப்பதன் "குறிக்கோளை" எழுதுக. (1 புள்ளிகள்)

விடை

(1) (A)

01. 04 . 1997 இல்
மறுபடிவிலை மதிப்பீட்டுக் கணக்கு

	ரூபா	ரூபா		ரூபா
பொறி		50000	பொறித்தேய்வு ஏற்பாடு	100000
மோட்டார் வாகனம்		120000	மோட்டார்வான்	
கடன்பட்டோர்		22000	தேய்மான ஏற்பாடு	170000
இலாப பகிர்வு				
அனில்	39000			
பசில்	26000			
சிசில்	13000	78000		
		270000		270000

குறிப்பு :
நிலையான சொத்துக்கள் மறுபடி விலைமதிப்புக்கு உள்ளாகும் போது மறுபடிவிலைமதித்தலுக்கு உள்ளாகும் நிலையான சொத்து கணக்குகளும், மறுபடிவிலைமதித்தல் திகதிவரை குறிப்பிட்ட நிலையான சொத்து தொடர்பாக செய்யப்பட்ட திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்குகளும் மூடப்பட்டு மறுபடிவிலைமதிக்கப்பட்ட புதிய பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு புதியகணக்குகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அவ்வகையில் வினாவின்படி மறுபடி விலைமதித்தல் தொடர்பான கணக்குகள் பின்வருமாறு அமையும்.
(A மறுபடிவிலைமதிப்பீட்டு கணக்குக்கு பதிலாக கீழேதரப்பட்ட B முறையிலான மறுபடிவிலைமதீப்பீட்டு கணக்கே மிக பொருத்தமானதாகும்.)

(B)

மறுபடி விலைமதித்தல் கணக்கு

கடன்பட்டோர்	22000	மோட்டார் கணக்கு	50000
மூலதனக் கணக்கு		பொறி கணக்கு	50000
அனில்	39000		
பசில்	26000		
சிசில்	13000		
	100000		100000

பொறி, பொறிதொகுதி கணக்கு

மீதி கீழ். வந்தது	350000	பெ.தேய்வு ஏற்பாடு	100000
மறுவிலைமதித்தல் க/கு	50000	மீதி கீழ் சென்றது	300000
	400000		400000
மதி கீழ். வந்தது	300000		

மோட்டார் வாகனம் கருவிகள் கணக்கு

மீதி கீழ். வந்தது	270000	பெ.தேய்வு ஏற்பாடு	170000
மறுவிலைமதித்தல் க/கு	50000	பசில் மூலதனக்க/கு	100000
		மீதி கீழ். சென்றது	50000
	320000		320000
மீதி கீழ். வந்தது	50000		

* மறுபடி விலைமதித்தல் கணக்கு (B) முறையில் செய்திருப்பின் மோட்டார் கணக்கு மேற்கூறியவாறு அமையும்

கடன்பட்டோர் கணக்கு

மீதி கீழ். வந்தது	180000	மறுவிலைமதித்தல்க/கு (அறவிடமுடியாக்கடன்)	22000
		மீதி கீழ். சென்றது	158000
	180000		180000
மீதி கீழ். வந்தது	158000		

குறிப்பு :

* பரீட்சைக்கு மாணவர்கள் மேற்கூறிய இரண்டு முறையிலும் ஏதாவது ஒன்றின்படி மறுபடிவிலைமதித்தல் கணக்கினைத் தயாரிக்கலாம். (ஏனையகணக்குகள் தயாரிப்பது அவசியமில்லை)

* மறுபடிவிலைமதித்தல் இலாபம்/நட்டம் மூலதனம் சார்ந்த விடையங்கள் ஆகையால் அவை *பங்காளர் மூலதனக் கணக்கிற்கே மாற்றப்படல் வேண்டும். (வினாக்களில் நடைமுறைக்கணக்கின் ஊடாக மறுபடிவிலை மதித்தல் விளைவினை சீராக்குக* எனக்குறிப்பிடப்பட்டால் மட்டுமே நடைமுறைக்கணக்கின் ஊடாக சீராக்குதல் வேண்டும்).

(2)

மூலதனக் கணக்கு

	அனில்	பசில்	சிசில்	டேவிட்		அனில்	பசில்	சிசில்	டேவிட்
நன்மதிப்பு	40000	-	40000	40000	மீதி	250000	250000	125000	-
காசு	-	150000	-	-	காசு	-	-	-	200000
மோ. வான்	-	100000	-	-	காசு	-	-	50000	-
கடன் க. கு	-	90000	-	-	நன்மதிப்பு	60000	40000	20000	-
மீதி. செ	309000	-	168000	160000	மறுமதிப்பீட்டு இலாபம்	39000	26000	13000	-
					நடைமுறை க. கு	-	24000	-	-
	349000	340000	208000	200000		349000	340000	208000	200000

குறிப்பு :

பசில் பங்குடமையில் இருந்து ஓய்வுபெற்று தனது உரிமைகளை பெறும்வழிவகைகள் பற்றியப்பதிவுகள் (காசு 150000 ரூபா, மோட்டார் 100000 ரூபா, கடன் கணக்கு 90000 ரூபா) மூலதனக்கணக்கின் ஊடாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

குறிப்பு :

* நன்மதிப்பு ஆனது நிறுவனத்தின் மூலதன இலாப/நட்டம் சார்ந்த விடையமாக அமைவதனால் அது தொடர்பான *சீராக்கங்கள் பங்காளர் மூலதனக்கணக்கின் ஊடாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். (வினாவில் நடைமுறை கணக்கின் ஊடாக சீராக்குக எனக்குறிப்பிடப் பட்டால் மட்டுமே* நன்மதிப்பு தொடர்பான சீராக்கங்கள் நடைமுறைக்கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்).

* மூலதனக் கணக்கில் மேலே காட்டப்பட்ட நன்மதிப்பு சீராக்கத்துக்குப் பதிலாக தேறிய தொகையினையும் காட்டலாம்.

எடுத்துக்காட்டு

	அனில்	பசில்	சிசில்	டேவிட்
நன்மதிப்பு (பழையவிகிதம்)	60000	40000	20000	
நன்மதிப்பு (புதியவிகிதம்)	40000	-	40000	40000
	+20000	+40000	-20000	-40000

பதிவு

		வரவு	செலவு
மூலதனக் கணக்கு	சிசில்	20000	
	டேவிட்	40000	
	அனில்		20000
	பசில்		40000

காரணம்

பசில் விலகி டேவிட் சேர்வதால் அனிலினதும், பசிலினதும் நன்மதிப்பு பங்கில் இழப்பு ஏற்படுவதனால், அவ்விழப்பினால் சிசிலும் டேவிட்டும் அனுகூலம் பெறுகிறார்கள். இழப்பவர்களின் பங்கு மேற்கூறிய பதிவுகளால் அனுகூலம் பெறுபவர்களால் ஈடுசெய்யப்படுகின்றது.

(3)

அனில், சிசில், டேவிட் பங்குடைமை வியாபாரம்
1997.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
வியாபார இலாபநட்டக் கணக்கு

	ரூபா	ரூபா		ரூபா
ஆரம்ப தொக்கு		200000	விற்பனை	800000
கொள்வனவுகள்		400000		
		600000		
இறுதிஇருப்பு		(150000)		
விற்பனைக்கிரயம்		450000		
மொத்தலாபம்		350000		
		800000		800000
பொறிதேய்வு		75000	மொத்தலாபம்	350000
மோட்டார் தேய்வு		5000		
தொலைபேசி, மின் கட்டணம்		60000		
கடன்வட்டி		9000		
நானாவிதச் செலவுகள்		111000		
இலாபம் அனில்	30000			
சிசில்	30000			
டேவிட்	30000			
		90000		
		350000		350000

(4)

நடைமுறைக் கணக்கு

	அனில்	பசில்	சிசில்	டேவிட்		அனில்	பசில்	சிசில்	டேவிட்
முலதனக் கணக்கு	-	24000	-	-	மீதி	10000	24000	16000	-
பற்று	10000	-	8000	5000	இலாபம்	30000	-	30000	30000
மீதி	30000	-	38000	25000					
	40000	24000	46000	30000		40000	24000	46000	30000

குறிப்பு :
பங்காளர் தமது *நிலையான மூலதனத்தில் குறைப்பினை மேற்கொள்ளும் போது மட்டுமே* பற்று, பங்காளர் மூலதனக் கணக்கில் வரவுவைக்கப்படும். மற்றெல்லாச்சந்தர்பங்களிலும் பற்றுக்கள் நடைமுறைக் கணக்கிலேயே வரவில் வைத்தல் வேண்டும்.

(5)

அனில், சிசில், டேவிட், பங்குடமையின்
1997 மார்ச் 31இல் உள்ளவாறான ஐந்தொகை

			நிலையான சொத்துக்கள்	ம. விலை மதிப்பு பெறுமதி	திரண்ட தேய்வு	தேறிய பெறுமதி
மூலதனக் கணக்கு						
அனில்	309000		பொறி	300000	75000	225000
சிசில்	168000		மோ.வான்	50000	5000	45000
டேவிட்	160000	637000		350000	80000	270000
நடைமுறைக் கணக்கு			நடைமுறைச் சொத்துக்கள்			
அனில்	30000					
சிசில்	38000		இறுதி இருப்பு		150000	
டேவிட்	25000	93000	கடன்பட்டோர்		58000	
			வங்கி		391000	599000
<u>நீண்ட காலப் பொறுப்புக்கள்</u>						
10% பசில் கடன்		90000				
<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>						
கடன் கொடுத்தேதர்	20000					
பசில் கடன் வட்டி	9000					
சென்மதிகள்						
தொலைபேசி	8000					
மின்சாரம்	12000	49000				
		869000				869000

குறிப்பு :

* நிலையான சொத்துக்கள் மறுபடிவிலைமதிக்கப்பட்ட பின் மறுபடிவிலைமதிக்கப்பட்ட பெறுமதியும், அப்பெறுமதி மீது செய்யப்பட்ட தேய்வும்மட்டுமே ஐந்தொகையில் இடம்பெறும்.

* பசிலின் கடன் நீண்டகாலப் பொறுப்பின் கீழ் காட்டப்படவேண்டியது அவசியமாகும். பசிலின் கடன்வட்டி பசிலின் கடன்கணக்குடனும் சேர்த்துக் காட்டப்படலாம்.

கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு

	ரூபா		ரூபா
மீதி கீழ். வந்தது	180000	மறுமதிப்பீட்டுக் கணக்கு (அறவிட முடியா கடன்)	22000
விற்பனை	800000	வங்கி	900000
		மீதி கீழ சென்றது	58000
	980000		980000
மீதி கீழ். வந்தது	58000		

* கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் இருந்து விற்பனை கணிப்பிடப்படுகின்றது.

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

	ரூபா		ரூபா
வங்கி	480000	மீதி. கீழ். வந்தது	100000
மீதி கீழ். சென்றது	20000	கொள்வனவு	400000
	500000		500000
		மீதி கீழ் வந்தது	20000

கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் இருந்து கொள்வனவு கணிப்பிடப்படுகின்றது.

வங்கிக் கணக்கு

	ரூபா		ரூபா
மீதி	60000	பசில்	150000
டேவிட்	200000	கடன்கொடுத்தோர்	480000
சிசில்	50000	ஏனைய கொடுப்பனவுகள்	111000
கடன்பட்டோர்	900000	தொலைபேசி	55000
		பற்று அனில்	10000
		சிசில்	8000
		டேவிட்	5000
		மீதி	391000
	1210000		1210000

வங்கிக்கணக்கு தயாரிப்பதன் நோக்கம் இறுதி வங்கி மீதி காண்பதற்கேயாகும். எனினும் வங்கிக்கணக்கு தயாரிக்காமல் இறுதி ஐந்தொகையை சமப்படுத்துவதன் மூலமும் வங்கி மீதியினை கண்டுகொள்ளலாம்.

மோட்டார்வாகன / கருவிகள் கணக்கு

	ரூபா		ரூபா
மீதி கீழ். வந்தது	270000	மறுமதிப்பீட்டுக் கணக்கு	120000
		பசில் மூலதனக் கணக்கு	100000
		மீதி கீழ். சென்றது	50000
	270000		270000

மறுபடி விலைமதிப்புக்கணக்கு (A) முறையில் செய்திருப்பின் மோட்டார் கணக்கு மேற்கூறியவாறு அமையும்.

10% பசில் கடன் கணக்கு

	ரூபா		ரூபா
மீதி கீழ். சென்றது	90000	மூலதனக்கணக்கு	90000
	90000		90000
		மீதி கீழ். வந்தது	90000

பசில் கடன் கணக்கில் பசில் கடன்வட்டி 9000 ரூபாவினையும் செலவுவைத்தும் காட்டலாம்

(ஆ) ஞாபனமறுமதிப்பீட்டுக் கணக்கு
Memorandam Revaluation Account

வரலாற்றுக்கிரய எண்ணக்கருவின்படி நிலையான சொத்துக்கள் அவற்றின் கணக்குகளில் (வரலாற்று) கிரயத்திலேயே தொடர்ந்தும் பாராமரிக்கப் படுகின்றன (நிலையான சொத்துக்கள் அவற்றின் சந்தைப் பெறுமதியில் கணக்குகளில் காட்டப்படுவதில்லை) எனவே நிலையான சொத்துக்களின் பெறுமதியில் ஏற்பட்டிருக்ககூடிய மாற்றங்களினால் ஏற்படக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தினை ஓய்வு பெறும் பங்காளனுக்கு உரித்தாக்குவதற்காக பங்காளன் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் நிலையான சொத்துக்கள் மறுபடி விலை மதிக்கப்படுகின்றன. *சொத்துக்கள் மறுபடி விலை மதிக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய இலாப நட்டங்களை மதிப்பிடவும் சம்பந்தபட்ட நிலையான சொத்துக் கணக்குகளை மூடுவதற்கும் என ஞாபன மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கப்படுகின்றது.*

பங்காளர் ஓய்வு பெறும் பொழுது வேறு சொத்துக்கள் (நடைமுறைச் சொத்து) பொறுப்புகள் ஏற்படக்கூடிய பெறுமதி மாற்றங்களினால் ஏற்படக்கூடிய இலாபநட்டங்களும் இக்கணக்கில் தாக்கல் செய்து பங்காளருக்கு மறுபடிவிலைமதித்தல் இலாபநட்டங்கள் உரித்தாக்கப் படுகின்றது.

(கணக்கீட்டு செயன்முறையில் தற்காலிகமாக உருவாக்கி பதிவழிக்கப்படும் கணக்குகளும், இரட்டைபதிவின் அடிப்படையில் பேணப்படாத கணக்குகளும் ஞாபனக்கணக்கு என அழைக்கப்படும்)

* * * * * *

(2)

(அ) சிறிவர்தன சேவை வழங்கும் நிறுவனமொன்றில் ஈடுபட்டுள்ளார். 1997ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கான நிதி புள்ளிவிபரங்களின் சுருக்கம் சமன்பாட்டு வடிவில் கீழ்க்காணுமாறு தரப்படுகிறது. உடமையாளனின் உரிமைத்துவத்தில் ஏற்படுகிற இலக்கம் 5 இல் உள்ள கொடுக்கல்வாங்கல் தவிர்ந்த, ஏனைய ஒவ்வொரு கூடுதல்களும் அல்லது குறைதல்களும் தேறிய இலாபத்தைப் பாதிக்கின்றன.

		காசு	+	அலுவலகம் பொருத்து	+	காணி	=	பொறுப்பு	+	உடமையாளனின் உரிமைத்துவம்
		ரூபா		ரூபா		ரூபா		ரூபா		ரூபா
மீதி		45000	+	7500		+150000	=	37500		+165000
கொடுக்கல் வாங்கல	1.	+90000					=			+90000
	2.	- 32500					=			-32500
	3.	- 23000					=	-23000		
	4.			+6000			=	+6000		
	5.	-19500					=			-19500
	6.	+40000				+40000	=			
	7.			-6800			=			-6800

1. மேலே காட்டப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களையும் விபரிக்குக (3 1/2 புள்ளிகள்)
2 மாதத்துக்குரிய தேறிய இலாபத்தைக் கணக்கிடுக. (1 1/2 புள்ளிகள்)

(ஆசிரியர் குறிப்பு : வினாவின்படி 3, 4, 6 உருப்படிகளும் தேறிய இலாபத்தை பாதிக்காது. உண்மையில் கணக்கின் தரவு பிழையாகும்.) (5 புள்ளிகள்)

(ஆ) கீழ்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் "சரியானவையா" அல்லது "பிழையானவையா" என்பதைக் குறிப்பிடுக. உமது விடைகளுக்கான காரணங்களைச் சுருக்கமாகத் தருக.

1. ஒரு நிதியாண்டில் செய்யப்பட்டதொரு கொடுப்பனவு தொடர்ந்து வரும் நிதி ஆண்டில் ஒரு செலவாகக் கருதமுடியும்.

2. வியாபாரமொன்று இலாபமொன்றை ஆக்கினால், ஆண்டிறுதி ஐந்தொகையில் காசு, வங்கிமீதிகள், இலாபத்திலான இந்த அதிகரிப்பைக் காட்டவேண்டியது அவசியமாகும்.

3. பெறுமானத்தேய்வுக் கணக்குக்கான ஏற்பாடானது. வியாபாரம். நிலையான சொத்துக்களைப் பதிலீடு செய்வற்காக வேறாக்கி வைத்துள்ள காசுமுதல் தொகையைக் காட்டுகிறது.

(02புள்ளிகள்)

(இ) சில்லறை வியாபரியான பி.சனிலின் பேரேட்டில் 1997.01.01 ஆந் திகதி இருந்தபடி பின்வரும் சொத்துக்களும் பொறுப்புக்களும் காணப்பட்டன.

		ரூபா
சொத்துக்கள் :	காசு	12000
	தொக்கு	8000
	கட்டிடங்கள்	30000
அலுவலகத்	தளாபாடம்	15000
கடன்பட்டோர் -	எஸ். பெரேரா	750
	லால் கம்பனி	1800
பொறுப்புக்கள் கடன் கொடுத்தோர்		
	டி.லலித	460
	எச்.குமார்	1300

ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வரும் மூல ஆவணங்களை உருவாக்கின

விற்பனை பட்டியல்

	ரூபா
001 ஜனவரி 3 அ. பாலா	750
002 ஜனவரி 3 எஸ். பெரேரா	1500
003 ஜனவரி 4 பி. குணபால	2500
004 ஜனவரி 10 லால் அன் கம்பனி	5000

விநியோகத்தர்களின் பட்டியல்

	ரூபா
ஜனவரி 5 டி. லலித் (பண்டங்கள்)	1800
ஜனவரி 16 எம்.மானெல் (அலுவலக எழுது பண்டங்கள்)	500
ஜனவரி 20 எச். குமார (பண்டங்கள்)	800
ஜனவரி 25 ரெலிக்கொம் கம்பனி (தொலைபேசிக் கட்டணம்)	1200
ஜனவரி 30 அ. பாலா – (பண்டங்கள்)	1500

றுவனவுகள்

	ரூபா
பட்டி. இல. 101 ஜனவரி 3 எஸ்.பெரேரா	750
" 102 ஜனவரி 20 லால் அன் கோ	3000
" 103 ஜனவரி 22 காசு விற்பனை	2000
" 104 ஜனவரி 25 அலுவலக பழைய தட்டச்சு இயந்திரம் விற்பனை	3000

வழங்கப்பட்ட காசோலைகள்

காசோலை இலக்கம்		ரூபா
1112	ஜனவரி 5 கூலிகள்	3000
1113	ஜனவரி 8 காசுக் கொள்வனவு	500
1114	ஜனவரி 10 டி. லலித்	460

வழங்கப்பட்ட செலவுத்தாள்

	ரூபா
பட்டி. இல. 222 ஜனவரி 4 அ. பாலா	250
223 ஜனவரி 16 பி.குணபால	500

பின்வருவனற்றைத் தயாரிக்கும்படி நீர் கேட்கப்படுகின்றீர்

1. பி.சுனிலின் கணக்கே ஏடுகளை ஆரம்பிப்பதற்கு பொதுநாட்குறிப்புப் பதிவொன்றைத் தயாரிக்குக. (1 1/2 புள்ளிகள்)
2. மேற்காட்டப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நாளேடுகளிலும் காசேடுகளிலும் பதிவுசெய்வதோடு பேரேட்டிலும் அவற்றைப் பதிவுசெய்க. (6 1/2 புள்ளிகள்)

(08 புள்ளிகள்)

> **ஆசிரியர் குறிப்பு :**
> வினாத்தாளில் "செலவுத்தாள்" என்ற பதத்திற்குப் பதிலாக "கொடுகடன்தாள்" என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது.

(ஈ) வியாபாரமொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிசெய்யும் போது தொடர்ந்து நடத்தப்படும் எண்ணக்கரு (goingconcernconcept) கைவிடப்பட்டால் இந்நிதிக் கூற்றுக்களின் மீதான பிரதான பாதிப்புக்கள் எவை?

(01 புள்ளி)

(மொத்தம் 16 புள்ளிகள்)

விடை

(2)

அ) 1)
1. சேவை வழங்கல் மூலம் பெற்ற வருவாய் 90000 ரூபா
2. சேவை வழங்கலுக்கான செலவுகள் 32500 ரூபா
3. காசுமூலம் தீர்க்கப்பட்ட பொறுப்பு 23000 ரூபா
4. அலுவலகச் சாதனம் 6000 ரூபாவிற்கு கடனுக்கு வாங்கியமை
5. உரிமையாளர் எடுத்த காசு 19500 ரூபா
6. 40000 ரூபாவிற்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டது.
7. 6800 ரூபா பெறுமானமுடைய அலுவலக உபகரணங்கள் தேய்வுக்குட்பட்டன/பாவிக்கப்பட்டன.

> குறிப்பு :
> வினாவின் படி 3, 4, 5, 6 விடயங்கள் இலாப/ நட்டங்களை பாதிக்காது என்பதை கவனிக்க.

2) 1997 ஏப்பிரல் மாதத்திற்கான தேறிய இலாபக் கணிப்புக் கூற்று

	ரூபா	ரூபா
சேவை வருவாய்		90000
கழி		
சேவைச் செலவுகள்	32500	
அலுவலக உபகரணம் தேய்வு	6800	(39300)
தேறியலாபம்		50700

ஆ)

1. சரி
முற்பணமாக ஒரு ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த செலவுகள் தொடர்ந்துவரும் நிதியாண்டில் செலவாகக் கருதப்பட முடியும்.

2. பிழை
அட்டுறுவருமானங்கள், செலவுகள் என்பன இலாபநட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் அத்துடன் பற்று, நிலையான சொத்து வாங்கியமை அல்லது விற்பனை செய்யப்பட்ட நடவடிக்கைகளாலும், கடன்பெறப்பட்டு அல்லது வழங்கப்பட்டமை தொடர்பான நடவடிக்கைகளாலும் இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

வங்கி/காசு மீதிகளில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்க முடியாது.
(காசு அடிப்படையிலான கணக்கீட்டில் இலாப அதிகரிப்புக்கு ஏற்ப காசு/வங்கி மீதியில் அதிகரிப்பு ஏற்படலாம்.)

3. பிழை
பெறுமானத்தேய்வு ஏற்பாடு ஆனது சொத்தினை பிரதியீடு செய்வதற்காக இலாப நட்டக் கணக்கில் இருந்து ஏற்பாடு செய்யப்பட்ட “நிதியினைக்” குறிக்கின்றது.
(காசு, நிதி என்றபதங்கள் வேறு வேறானவை ஆகும் என்பதை கவனத்தில் கொள்க)

இ) பொது நாட்குறிப்பு

திகதி	விபரம்	வரவு	செலவு
01.1.97	கட்டிடம்	30000	
	அலுவலகத் தளபாடம்	15000	
	கையிருப்பு	8000	
	காசு	12000	
	கடன்படுனர் S. பெரேரா	750	
	லால் அன்ட் கம்பனி	1800	
	கடன் கொடுனர் டி. லலித்		460
	H. குமார		1300
	மூலதனம்		65790
	(1.1.97 இல் உள்ள சொத்துக்களும் பொறுப்புக்களும்)	67550	67550
16.1.97	அலுவலக எழுது உபகரணம்	500	
	M. மானல்		500
	(M. மானலிடமிருந்து வாங்கிய அலுவலக உபகரணம் ரூபா 500)		
25.1.97	தொலைபேசி கட்டணம்	1200	
	ரெலிகொம் கம்பனி		1200
	(ரெலிகொம் கம்பனிக்குக் கொடுக்கவேண்டிய கட்டணம் 1200 ரூபா)		

> குறிப்பு :
> தொடக்கப்பதிவுகள், நிலையான சொத்துக்கடன் கொள்வனவு, செம்மையாக்கல்பதிவு என்பவற்றுக்கு முதற்பதிவேடு நாட்குறிப்பு என்பதை மாணவர்கள் நினைவில்கொள்ள வேண்டும்.

விற்பனை நாளேடு

திகதி	பட். இல.	விபரம்	தொகை
03.1.97	001	அ. பாலா	750
03.1.97	002	S. பெரேரா	1500
04.1.97	003	பி. குணபாலா	2500
10.1.97	004	லால் அன்ட் கம்பனி	5000
31.1.97		(விற்பனைக் கணக்கிற்கு மாற்றியமை)	9750

கொள்வனவு நாளேடு

திகதி	பட். இல.	விபரம்	தொகை
05.1.97		டி. லலிதா	1800
20.1.97		எச். குமார	800
30.1.97		அ.பாலா	1500
31.1.97		(கொள்வனவுக் கணக்கிற்கு மாற்றியமை)	4100

குறிப்பு :
திகதி,பட்டியல் இலக்கம் என்பன நாளேட்டின் அமைப்பில் காட்டப்படவேண்டியது அவசியமாகும்.

உட்திரும்ல் நாளேடு

திகதி	செலவுத்தாள்	விபரம்	தொகை
04.1.97	222	அ. பாலா	250
16.1.97	223	பி. குணபாலா	500
31.1.97		(உட்திரும்பிய கணக்கிற்கு மாற்றியமை)	750

காசேடு

திகதி	ப. இல	விபரம்	பே	காசு	வங்கி	திகதி	கா. இல	விபரம்	பே	காசு	வங்கி
1.1.97		மீதி		12000		5.1.97	1112	கூலி			3000
3.1.97	101	எஸ். பெரேரா		750		8.1.97	1113	கொள்வனவு			500
20.1.97	102	லால் அன். கோ		3000		10.1.97	1114	டி. லலிதா			460
22.1.97	103	விற்பனை		2000							
25.1.97	104	துட்டச்சு விற்பனை		3000							

குறிப்பு :

* காசேட்டின் அமைப்பில் மேற்கூறிய சகல விபரங்களும் உள்ளடக்கியிருப்பது அவசியமாகும்.
* பேரேட்டுக் கணக்குகள் மூன்று பேரேடுகளிலும் வெவ்வேறாக தயாரிக்கப்படல் வேண்டும்.

பொதுபேரேடு

கட்டடம் கணக்கு

1.1.97 மீதி கீழ். வந்தது 30000	

அலுவலகத் தளபாடம் கணக்கு

1.1.97 மீதி கீழ். வந்தது 15000	

மூலதனம் கணக்கு

	1.1.97 மீதி கீழ். வந்தது 65790

உட்திரும்பல் கணக்கு

31.1.97 கடன்பட்டோர் 750	

விற்பனை கணக்கு

			22.1.97	காசு	2000
			31.1.97	க.படு	9750

அலுவலக எழுதுபொருள் கணக்கு

16.1.97	எம் மானல்	500			

தொலைபேசிக் கட்டணம் கணக்கு

25.1.97	ரெலிகொம்	1200			

ரெலிகொம் கம்பனி கணக்கு

			25.1.197	தொலைபேசி	1200

தட்டச்சு விற்பனை கணக்கு

			25.1.97	காசு	2000

கூலி கணக்கு

5.1.97	வங்கி	3000			

கொள்வனவு கணக்கு

1.8.97	வங்கி	500			

எம் மானல் கணக்கு

			16..1.97	அலுவலக எழுது	.500

கையிருப்பு கணக்கு

மீதி வந்தது	8000		

கடன்பட்டோர் பேரேடு

எஸ். பெரேரா கணக்கு

மீதி கீழ். வந்தது	750		
விற்பனை	1500		

அ. பாலா கணக்கு

விற்பனை	750	உ.திரும்பல்	250

பீ. குணபாலா கணக்கு

விற்பனை	2500	உட்திரும்பல்	500

லால் அனட் கோ கணக்கு

மீதி கீழ். வந்தது	1800	காசு	3000
விற்பனை	1500		

கடன்கொடுத்தோர் பேரேடு

எச் குமார கணக்கு

		மீதி கீழ். வந்தது	1300
		கொள்வனவு	800

டி. லலிதா கணக்கு

வங்கி	460	கொள்வனவு	1800

குறிப்பு :

* பொதுப்பேரேட்டிலும் காசேட்டினை தயாரிக்கலாம்.
* வினாவின்படி பேரேட்டுக் கணக்குகள் கூட்டிக்காட்டப்பட வேண்டியதில்லை ஆனால் பரீட்சைமீதி கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் கணக்குகள் கூட்டிக்காட்டப்படல் வேண்டும்.

(ஈ) 1. நிலையான சொத்துக்களை வரலாற்றுக் கிரயத்தில் வெளிப்படுத்த முடியாமை
2. நிலையான சொத்துக்களுக்கு தேய்வு ஏற்பாடு செய்ய முடியாமை
3. சொத்தின் ஆயுட்காலத்திற்கு முக்கியத்துவம் வழங்காமையால் சொத்துக்களை நிலையான, நடைமுறைச் சொத்துக்கள் என வகைப்படுத்த முடியாமை.
4. இக் கோட்பாட்டின்மையால் நீண்டகாலம், குறுங்காலம் என பொறுப்புக்களை வகைபடுத்தமுடியாமை.
5. முடிவுக்கணக்குகள் தயாரிப்பதற்கு அதிககாலமும் செலவும் ஏற்படும்.

* * * * *

(3)

(அ) வரையறுத்த காமினி நிறுவனத்தின் 1997.03.31 ஆந் திகதியில் முடிந்த ஆண்டுக்கான கணக்கீட்டு அறிக்கைகளிலிருந்து பெயர்த் தெடுக்கப்பட்ட தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

1996.03.31 ஆந் திகதியில் இருந்தபடியான விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

	ரூபா
வரவு மீதி	25000
செலவுமீதி (கொடுகடன்)	500
கடன்விற்பனை	194000
வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து திருப்பப்பட்ட பொருள்கள்	1400
வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்துபெறப்பட்ட காசும் காசோலைகளும்	188000
வருமதி உண்டியல்கள் (இவ்வாண்டில் பெற்றுக்கொண்டவை)	2000
வியாபாரக் கடன்பட்டோருக்கு அனுமதிக்கப்பட்ட கழிவுகள்	6500
1997.03.31 இல் உள்ளவாறு பேரேட்டின் செலவு (கொடுகடன்) மீதி	800
கடன்பட்டோர் பேரேட்லுள்ள மீதிகள் கடன்கொடுத்தோர் பேரேட்டிலுள்ள மீதிகளுக்கெதிராகப் பதிலீடுசெய்யப்பட்டது	750

கடன்பட்டோன் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 300 தொகையான காசோலை ஒன்று 1997 மார்ச் 15 இல் மறுக்கப்பட்டு 1997.03.31 வரை நிலுவையாக வைக்கப்பட்டுள்ளது.

1997.03.31 ஆந் திகதி இருந்தபடி விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மீதி, விற்பனைப் பேரேட்டிலிருந்து பெயர்த் தெடுக்கப்பட்ட கடன்பட்டோரின் மீதிப்பட்டியலுடன் உடன்படவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை பின்வரும் தவறுகளை எடுத்துக்காட்டியது.

1. 1996 நவம்பர் மாதத்திற்கான விற்பனை நாளேடு ரூபா 1500 ஆல் குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது.
2. 1997 மார்ச்சில் காசு விற்பனைகள் ரூபா 10000 வியாபரக் கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசுடன் சேர்க்கப்பட்டிருந்தது.
3. கடன்பட்டோன் ஒருவனின் பெயருள் கணக்கில் திருப்பப்பட்ட பொருள் ஒன்றின் பெறுமதியான ரூபா 500 பற்றி எதுவித பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் ஏனைய எல்லா அவசியமான பதிவுகளும் செய்யப்பட்டிருந்தன.
4. விற்பனை நாளேட்டில் ரூபா 540 இற்கான உருப்படியொன்று கடன்பட்டோர் பெயருள் கணக்கிலே ரூபா 450 ஆக பதியப்பட்டிருந்தன.
5. கடன்கொள்வனவு ரூபா 4000 பெறுமதியான பொருட்கள் வரையறுத்த "காமினி" நிறுவனத்தால் விநியோகஸ்தர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது.
6. 1996 டிசம்பரில் சேனவிடமிருந்து வரவேண்டிய ரூபா 400 இற்கான படுகடனொன்று அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்டது. சேனவின் பெயருள் கணக்கில் சரியான பதிவு செய்யப்பட்டது. ஆனால் விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் எதுவித பதிவுப் செய்யப்படவில்லை.

பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகின்றீர்.

1. மேலே 1 இலிருந்த 6 வரை குறிக்கப்பட்டுள்ள தவறுகள் தொடர்பாக எதுவித திருத்தமும் செய்யுமுன்1997.03.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கொன்றைத் தயாரிக்குக. (6 புள்ளிகள்)
2. (அ) இல் உள்ள விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதிக்கான செம்மையாக்கங்களைக் காட்டுகிற கூற்றினைத் தயாரிக்குக. (4 புள்ளிகள்)

(ஆ) கீழவருவனவற்றை உதாரணங்களுடன் விளக்குக.
1. மூலதன வருமானம்
2. தவணையிட்ட வருமானச் செலவு

(02 புள்ளிகள்)

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் (SLAS) 12 எதிர்பாரா நிகழ்வொன்றை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துகிறது? எதிர்பாரா நிகழ்வுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய தகவல் என்ன?

ஆசிரியர் குறிப்பு :
3ஆம் கணக்கின் "அ" பிரிவின் உருபடி 5 இல் கடன் விற்பனைக்குட்பட்ட 4000 ரூபா பெறுமதியான பொருள் எனக்குறிப்பிடப்பட்டிருந்தது, ஆனால் அவ்விடயம் கடன் கொள்வனவுக்குட்பட்ட 4000 ரூபா என இடம் பெறுவதே சரியாகும்.

விடை

(3) 1.

விற்பனைப் பேரேட்டுக் கட்டுபாட்டுக் கணக்கு

	ரூபா		ரூபா
மீதி	25000	மீதி	500
கடன் விற்பனை	194000	உட்திரும்பல்	1400
மறுக்கப்பட்ட காசோலை	300	காசு	188000
		வருமதி உண்டியல்	2000
		கொடுத்த கழிவு	6500
		மாறுபதிவு/எதிர்தீர்த்தல்	750
மீதி. சென்றது	800	மீதி சென்றது	20950
	220100		220100
மீதி. வந்தது	20950	மீதி. வந்தது	800

(2)

விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு
மீதியை திருத்துவதற்கான கூற்று

	ரூபா	ரூபா
31.3.97 இல் திருத்தமுன் மீதி		20950
கூட்டு :		
1. விற்பனை நாளேடு குறைத்து மொத்தமாக்கல்	1500	
2. காசு விற்பனை	10000	11500
		32450
கழி :		
3. அறவிடமுடியபகக் கடன் பதிவழிப்பு	400	(400)
திருத்திய மீதி		32050

குறிப்பு :
31.3.97 இல் திருத்தமுன் உள்ளமீதி 20950 ரூபாவுக்குப்பதிலாக 20950 - 800 = 20150 ரூபாவையும் இடலாம்.

III, IV, V வினாவின் உருப்படிகள் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினைப் பாதிக்காது என்பதை கவனிக்க

(ஆ) 1. **மூலதன வருமானம் :**
வியாபாரம் ஒன்றின் வழமையான நடவடிக்கையில் இருந்தன்றி, வியாபாரத்தின் நிலையான சொத்து, பங்குமுதல், நீண்டகால கடன் (தொகுதிக்கடன்) தொடர்பாக ஏற்படக்கூடிய வருமானமாகும்
உ-ம் : *நிலையான சொத்து அகற்றல்/ முடிவுறுத்தல் இலாபம்
*பங்குவழங்கல் மூலமான பங்குவட்டம்
*தொகுதிக்கடன் வழங்கல் மூலமான தொகுதி கடன் வட்டம்
*நிலையான சொத்து மறுபடிவிலைமதித்தல் இலாபம்

3. **தவணை இட்ட வருமானச் செலவு (பிற்போடப்பட்ட வருமானச்செலவு)**
குறித்ததோர் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்படும் வருமானச் செலவு உருப்படியானது குறித்த நிறுவனத்திற்கு ஒரு ஆண்டுக்கு மேலாக பயனை ஈட்டித்தருமாக இருக்குமாயின் அத்தகைய பண்பினையுடைய வருமானச் செலவினையே தவணை இட்ட (பிற்போடப்பட்ட) வருமானச் செலவு எனக்கொள்ளப்படும். இத்தகைய செலவில் இருந்து

பயன்பெறும் ஆண்டுகளுக்கு குறித்த தொகையை இலாப நட்டக்கணக்கில் தாக்கல் செய்துபதிவழிப்பதுடன் எஞ்சிய தொகை பதிவழிக்கப்படாத கற்பனைச் சொத்தாக ஐந்தொகையில் காட்டப்படல் வேண்டும்.

உ-ம் : * சந்தைவிரிவாக்கத்துக்கு என மேற்கொள்ளப்பட்ட பேரளவு விளம்பரச் செலவு

* ஆராட்சி அபிவிருத்தி செலவு

(இ) ஒன்று அல்லது பல எதிர்கால நிகழ்ச்சிகள் ஏற்படும் போது அல்லது ஏற்படாது விடும்போது மட்டும் தீர்மானிக்கக்கூடிய நன்மையான அல்லது தீமையான விளைவாகும். இது ஐந்தொகைத்தினத்தில் நட்டமாகவோ அல்லது இலாபமாகவோ அமையலாம்.

இனங்காணுதல்

1. நிகழ்வின் தன்மை
2. நிகழத்தக்க விடையத்தின் பாதிக்கக்கூடிய காரணிகளின் தன்மை
3. ஏற்படும் பொறுப்பு மதிப்பிடக்கூடிய அல்லது மதிப்பிட முடியாமைக்கான காரணங்கள்

* * * * *

(4)

(அ) உற்பத்தி கணக்கொன்றைத் தயாரிப்பதன் தேவைகளை விளக்குக. (2 புள்ளிகள்)

(ஆ) வரையறுக்கப்பட்ட ஓடு உற்பத்தி நிறுவனம் ஒன்றின் புத்தகத்திலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட 1997.03.31 ஆந் திகதியில் இருந்தபடி மீதிகளின்பட்டியல் கீழே தரப்படுகின்றது.

	ரூபா
1996.4.01 இல் உள்ளவாறு இருப்பு	
முலப் பொருட்கள்	7800
புத்துருவாகும் பொருள்	1100
பூர்த்தியாகப்பட்ட பொருள்	20000
மூலப்பொருள் கொள்வனவு	180500
விநியோகத்தர்களுக்கு திருப்பட்ட மூலப் பொருட்கள்	2000
நேரடித் தொழிற்சாலைக் கூலிகள்	60400
சம்பளம் (மேற்பார்வையும் நிர்வாகமும்)	24000
ஆக்கவுரிமை வைத்திருப்போருக்கு - செலுத்திய அனுமதிக் கட்டணம்(licence fees)	10500
தொழிற்சாலை மின்சக்தி	8000
தொழிற்சாலை பொதுச் செலவுகள்	6000
இயந்திரத்தேய்மானம்	8000
1997.03.31 இல் உள்ளவாறு இருப்பு	
மூலப்பொருட்கள்	9700
புத்துருவாகும் பொருள்	1600
பூர்த்தியாக்கப்பட்ட பொருட்கள்	?.
விற்பனை	275000

மேலதிக தகவல்கள்

1. சம்பளங்கள் மூன்றில் இரண்டு பங்கு உற்பத்திச்செலவுகளாகக் கருதப்படும்
2. 1996.04.01 பூர்த்தியாக்கப்பட்ட இருப்பில் இருந்த 8000 ஓடுகள் இவ்வாண்டு விற்கப்பட்டன. இவ்வாண்டுக்கான உற்பத்தி 95000 ஓடுகளாகளாகும் இந்த ஆண்டு 85000 ஓடுகள் விற்கப்பட்டன.
3. அனுமதிக் கட்டணங்கள் நேரடிச் செலவுகளாகக் கருதப்பட்டன.

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

1. 1997.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்திக் கணக்கினைத் தயாரிக்க. (5 1/2 புள்ளிகள்)
2. ஓடு ஒன்றினது உற்பத்திக் கிரயத்தைக்கணிக்குக. (1/2 புள்ளி)
3. ஆண்டு முடிவில் உள்ள முடிவுக் கையிருப்பினது பெறுமதியை கணித்தறிக. (1/2 புள்ளி)
4. 1997.03.31 இல் முடிவடையும் ஆண்டுக்கான வியபாரக்கணக்கைத் தாயரிக்க. (1 1/2 புள்ளிகள்)

(8 புள்ளிகள்)

(இ) ஒரு சில்லறை வியாபாரியின் 1996 இற்கான மொத்தலாபம் ரூபா 20000 ஆக இருந்தது. இது கிரயத்தின் மீது 33 1/3 சதவீத இலாபத்துடன் பெறப்பட்டிருந்து ஏனைய வியாபாரங்களில் இருந்து உண்டான போட்டியானது இவ் இலாபத்ததை 1997 இல் 25% ஆக்குறைக்கும்படி நிர்ப்பந்தித்தது.

1. 1996 இல் உள்ள தொகையின்படியே மொத்த இலாபத்தை அடையவேண்டுமானால் அவனது 1997 இற்கான மொத்த விற்பனை எவ்வளவாக இருக்கவேண்டும்? (1 1/2 புள்ளிகள்)
2. இந்த புதிய நிலைமையின் விளைவாக ரூபா 10000 மேலதிகச்செலவு ஏற்பாடுமானல் தேறிய இலாபத்தை ரூபா 5000 அதிகரிக்க அவனது விற்பனை எதுவாக இருக்கவேண்டும் (1 1/2 புள்ளிகள்)

(3 புள்ளிகள்)

(ஈ) கணக்கீட்டுக் கோட்பாடுகள் என்பதன் கருத்து என்ன? நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் கோட்பாடுகள் வெளிப்படுத்தப்பட வேண்டியது ஏன்?. (3 புள்ளிகள்)

4) விடை

(அ) உற்பத்திக் கணக்கொன்றைத் தயாரிப்பதன் தேவைகள்

1. உற்பத்திச் செலவுகளை முகாமையினரின் பயன்பாட்டிற்கு ஏற்ப வகைப்படுத்தல்
2. உற்பத்தி பொருளின் மொத்த கிரயத்தினை கணிப்பிடல்
3. உற்பத்தி அலகொன்றின் கிரயத்தைக் கணிப்பிடல்
4. உற்பத்திப் பொருட்களுக்கான விலையிடல் தீர்மானத்தை எடுப்பதற்குரிய உற்பத்திக் கிரயம் பற்றிய தகவல்களைப் பெறுதல்.
5. உற்பத்திக் கிரயத்தைக் கட்டுப்படுத்துவதற்கா தகவல்களைப் பெறுதல்

(ஆ)

1997.3.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட ஓர் உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்திக் கணக்கு

	ரூபா	ரூபா		ரூபா
1.4.96 இல் மூலப்பொருள் இருப்பு		7800	உற்பத்திக் கிரயம் வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்பட்டது	285000
கூட்டு				
கொள்வனவு	180500			
கழி				
வெளிதிரும்பல்	2000	178500		
		186300		
கழி				
31.3.97 இல் இருப்பு		9700		
பயன்படுத்திய மூலப்பொருள்		176600		
நேர்க்கூலி		60400		
அனுமதிக்கட்டணம்		10500		
மூலக்கிரயம்		247500		
தொழிற்சாலை மேந்தலைகள்				
சம்பளம் (24000 ஓ 2:3)	16000			
மின்சக்தி	8000			
பொறித்தேய்வு	8000			
பொதுச் செலவு	6000	38000		
		285500		
கூட்டு				
1.4.96 இல் புத்துருவாகும் – வேலை	1100			
கழி				
31.3.97 இல் புத்துருவாகும் – வேலை	1600	(500)		
உற்பத்திக்கிரயம்		285000		285000

(2) ஓடு ஒன்றின் உற்பத்திக்கிரயம்

$$\frac{\text{மொத்த உற்பத்தி கிரயம்}}{\text{இவ்வாண்டு உற்பத்தி அலகு}} = \frac{285000}{95000} = 3 \text{ ரூபா}$$

(3)

வருடத்தில் விற்பனை செய்யப்பட்டவை (அலகுகள்)	85000
கழி: ஆரம்பத்தில் உள்ளது (அலகுகள்)	8000
வருட உற்பத்தியில் வி. செய்யப்பட்டவை (அலகுகள்)	77000

இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டவை (அலகுகள்)	95000
கழி: விற்பனை செய்யப்பட்டவை (அலகுகள்)	77000
இறுதியாக உள்ள மீதி (அலகுகள்)	18000

ஆகவே வருட இறுதியிலுள்ள இருப்பின் பெறுமதி
18000 x 3 = 54000 ரூபா

(4)

1997.3.31இல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபாரக் கணக்கு

	ரூபா		ரூபா
1.4.97இல் இருப்பு	20000	விற்பனை	275000
கூட்டு உற்பத்திக் கிரயம்	285000		
	305000		
கழி 31.3.97 இல் இருப்பு	(54000)		
விற்பனைக்கிரயம்	251000		
மொத்தஇலாபம்	24000		
	275000		275000

(ஆ)

1. கிரயத்தில் 25% இலாபப்படி ரூபா 20000 இலாபம் உழைப்பதற்கு விற்பனை

$$= \frac{20000}{25} \times 125$$

= 100000 ரூபாவாக இருத்தல் வேண்டும்

> குறிப்பு :
> கிரயம் + இலாபம் = விற்பனை
> 100 + 25 = 125

2. தேறிய இலாபம் 35000 ரூபா உழைப்பதற்கு விற்பனையானது

$$= \frac{35000}{25} \times 125$$

= 175000 ஆகஇருத்தல் வேண்டும்

குறிப்பு :

தற்போதைய இலாபம்	20000
மேலதிகமாக ஏற்பட்ட செலவு	10000
மேலதிக இலாபம்	5000
புதிய நிலைமையில் இருக்க வேண்டிய மொத்த இலாபம்	35000

(஫) கணக்கீட்டு கோட்பாடு என்பது நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கும், நிறுவனத்தின் தகவல்கள் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளவும், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் கணக்கீட்டு அடிப்படை தத்துவங்களும் முறைகளுமாகும்.

உ-ம்
* மறுமதிப்பீட்க்கொள்கை
* வரிக்கொள்கை
* அந்நிய செலாவணி மாற்றீடு
* பெறுமானத் தேய்வு

நிதி கூற்றுக்களில் கணக்கீட்டுக் கோட்பாடுகள் வெளிபடுத்த வேண்டியதற்கான காரணங்கள்.
* நிதிக்கூற்று முழுமையான தகவல்களை வழங்குதலை உறுதிபடுத்தல்.
* நிதிகூற்றுத் தகவல்களை சரியாக விளங்கிக்கொள்ளல்
* நிதிக்கூற்றுத்தகவல்களின் நம்பிக்கைத் தன்மையை அதிகரித்தல்
* தீர்மானம் எடுத்தலை இலகுவாக்கல்

* * *

(5)

(அ) ஒற்றைப் பதிவுமுறைமை என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது என்ன? அதன் பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (1புள்ளி)

(ஆ) சேனவும் பாலாவும் இருவேறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது வியாபார மூலதனங்கள் 1996.03.31 ஆந் திகதியில் முறையே ரூபா 150000, 43000 ரூபாவும் ஆகும். 1997.03.31 இல் முடிந்த ஆண்டுக்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
சேனவின் வியாபாரத்தில் நட்டமும் அவரது எடுப்பனவுகளும் முறையே ரூபா 15000 உம், ரூபா 19000 உம் ஆகும். பாலாவின் எடுப்பனவு ரூபா 7000, அவரது வியாபார மூலதனம் 1997.03.31 அந்திகதி இருந்தபடி ரூபா 48000 ஆகும்.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

1. 1997.03.31 தினத்தன்று சேனவின் வியாபாரமூலதனம். (1 புள்ளி)
2. 1997.03.31 தினத்தில் முடிவடையும் ஆண்டுக்கான பாலாவின் இலாபம் அல்லது நட்டம் (1 புள்ளி)

(இ) தி.பொண்டோ பலசரக்குக் கடையொன்றை நடத்துக்கிறார் ஆனால் ஒருமுறையான கணக்குப்புத்தகத் தொகுதியைப் பேணவில்லை எனினும் நடைமுறையிலுள்ள அவரது புத்தகங்களை பரிசீலனை செய்தபோது சொத்துக்களும் பொறுப்புக்களும் 1996 ஆரம்பத்திலும் முடிவிலும் பின்வருமாறு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

	1996.01.01 இல்	1996.12.31 இல்
கட்டிங்கள் (கிரயத்தில்)	270000	270000
தளபாடம் (கிராயத்தில்	93000	93000
இருப்பு	127500	117900
சில்றைக் கடன்பட்டோர்	36450	64350
சில்லறை கடன்கொடுத்தோர்	74850	68550
காசுக் கையிருப்பு	69900	78300

வியாபாரத்தில் பேணப்பட்ட தற்காலிகக் குறிப்புப் புத்தகத்தில் உள்ளவற்றுக்கிணங்க ஆண்டுக்குரிய காசுக் கொடுப்பனவுகளும் பெறுவனவுகளும் கீழ்வருமாறு

	ரூபா
சம்பளம்	90300
கடன்பட்டோரிடமிருந்து பெற்றகாசு	1219500
சில்லறைச் செலவுகள்	31500
கடன்கொடுதோருக்கு கொடுத்த காசு	965100
அச்சிடலும் எழுதுபொருட்களும்	17100
வாடகையும் இறைகளும்	36000
தொலைபேசி கட்டணம்	21600
மின்கட்டணம்	10350

ஆண்டில் ஏதேனும் காசுக் குறைபாடு காணப்படின் அவை திரு.பெனாடோவின் எடுப்பனவுகள் எனக் கருதப்படல்வேண்டும். திரு. பெனாண்டோ தனது சொந்த தேவைக்கு ரூபா 10800 கிரயமான பொருட்களை வியாபாரத்திலிருந்து எடுத்துள்ளார்

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

1. 1996.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபர இலாபநட்டக் கணக்கு (4 புள்ளிகள்)
2. 1996.12.31 இல் திகதி இருந்தபடியான ஐந்தொகை (3 புள்ளிகள்)

(07 புள்ளிகள்)

(ஈ) சரண நிறுவனத்திற்காக 1997.04.30 இல் முடிவடையும் ஆண்டுக்காக முன்வரையப்பட்ட இலாபநட்டக்கணக்கை (Draf Account) தயாரிப்பதற்காக பரீட்சை மீதியை தயாரித்த போது பரீட்சை மீதி இணங்கவில்லை. தொங்கல் கணக்கொன்றில் பரீட்சை மீதியின் வித்தியாசம் இடப்பட்ட பின் முன்வரையப்பட்ட இலாப நட்டக்கணக்கு (Draf Account) தயாரிக்கப்பட்டது. இதன்படி 78260 ரூபா தேறியலாபம் மதிப்பிடப்பட்டது தொங்கல் கணக்கு மீதி ஐந்தொகையில் காட்டப்பட்டது (இக்கம்பனி கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணவில்லை)

கணக்குகளின் தொடர்ச்சியான பரிசோதனைகளின் போது பின்வரும் வழுக்களும் தவறல்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

1. 1996.04.30 இல் முன் செலுத்தப்படடிருந்த இறை ரூபா 490 இறைகள் கணக்கிலே ஆரம்ப மீதியாக கீழ்க்கொண்டு வரப்படவில்லை

2. கடன்கொள்வனவுகளுக்கான ரூபா 1762 சரியாக கொள்வனவுகள் கணக்கிலே வரவுவைக்கப்படடிருந்தது. ஆனால் விநியோகத்தர்கள் கணக்கில் ரூபா 1672 ஆக செலவு வைக்கப்பட்டிருந்தது.

3. வியாபாரப் பாவனைக்காக 1996.05.01 கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9800 கிரயமான உபகரணமொன்று கொள்வனவு கணக்குக்கில் வரவு வைக்கப்பட்டது. (நிறுவனம்ஆண்டுதோறும் உபகரணங்கள் கிரயத்தில் 20% பெறுமானத் தேய்வாக வழங்கியது)

4. முடிவுக் கையிருப்புக் கணக்கிலே ரூபா 2171 பெறுமதியான உருப்படிகள் முற்றாக விடுபட்டிருந்தன

5. வாடகைப் பெறுவனவுக் கணக்கிலிருந்த ரூபா 1000 செலவு மீதி பரீட்சைமீதியிலிருந்து தவறவிடப்பட்டது.
6. கூலி கள் கணக்கின் வரவுப் பக்கத்தில் ரூபா 100 குறைவாகப் பதியப்பட்டிருந்தது.

மேலேகூறிய தகவல்களைப் பயன்படுத்தி கீழ்வருவனவற்றைத் தயாரிக்கும்படி நீர் கேட்கப்படுகின்றீர்

1. மேற்கூறப்பட்ட வழுக்களையும் தவறல்களையும் தேவையான விடத்து சரிப்படுத்தும் வகையில் நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரிக்குக. (3 புள்ளிகள்)
2. வழுக்களை திருத்துவதற்கான தொங்கற் கணக்கொன்றைத் தயாரிக்குக. (1 புள்ளி)
3. சரியான தேறிய இலாபத்தைக் காட்டுகிற கூற்றொன்றைத் தயாரிக்குக. (2 புள்ளகள்)

(06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

(5)

விடை

(அ) ஒற்றைப்பதிவு முறைமை

கணக்கீட்டு அடிப்படைகள், இரட்டைபதிவு விதிகள், கணக்கீட்டு நியமங்கள், கம்பனிசட்டவிதிகளைப் பின்பற்றாது ஆகக்குறைந்த தகவல்களைப் பெறும்நோக்கில் கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்யும் கணக்கீட்டு முறைமை இதுவாகும். இம்முறைமையில் கொடுக்கல் வாங்கலானது ஏதாவது புத்தகங்களில் ஒரு முறைமட்டும் பதிவு செய்யப்படும்.

இம்முறையின் பிரதி கூலங்கள்

* இம் முறையில் கணக்குபதிவினை செவ்வைபார்க்க முடியாது
* இம்முறையில் இருந்து சரியான தகவல்களை பெறமுடியாது
* இம் முறையில் நிறுவனத்தின் இலாபநட்டங்களை சரியாகவும், துல்லியமாகவும் மதிப்பிட முடியாது.
* இம் முறையில் விரைவாக முடிவுக்கணக்குகளை தயாரிக்க முடியாது.

(ஆ) **தேறிய இலாபம் = ஆண்டு இறுதி மூலதனம் + பற்று – மேலதிக மூலதனம் + ஆண்டு ஆரம்ப மூலதனம்**

1. சேனவின் வியாபாரம்
-15000 = இறுதி மூலதனம் + 19000 - 150000
இறுதி மூலதனம் = 116000

தேறிய இலாபம் = இறுதி மூலதனம் + பற்று – ஆரம்ப மூலதனம்

2. பாலாவின் வியாபாரம்
48000 + 7000 - 43000 = தேறிய இலாபம் = 12000
அல்லது

சேன			பாலா	
31.3.96இல் மூலதனம்	150000	*	31.3.97இல் மூலதனம்	48000
தேறியலாபம்	(15000)	*	31.3.96 இல் மூலதனம்	(43000)
எடுப்பனவு	(19000)		எடுப்பனவு	7000
31.3.97இல் மூலதனம்	116000		தேறியலாபம்	12000

(இ)

திரு பெர்ணாண்டோவின் 31.12.96 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக் கணக்கு

	ரூபா	ரூபா		ரூபா
ஆரம்ப இருப்பு		127500	விற்பனை	1247,400
கொள்வனவு	958800			
எடுப்பனவு	(10800)	948000		
		1075500		
இறுதிஇருப்பு		(117900)		
விற்பனைக் கிரயம்		957600		
மொத்தலாபம்		289800		
		1247400		1247400
சம்பளம்		90300	மொத்தலாபம்	289200
சில்லறைச் செலவுகள்		31500		
எழுதுகருவிகள்		17100		
வடகையும் இறையும்		36000		
தொலைபேசி		21600		
மின்சாரம்		10350		
தேறியலாபம்		82950		
		289800		289800

குறிப்பு :
கொள்வனவு, விற்பனை என்பன கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்குகள் மூலம் பெறப்பட்டதாகும்

(இ)

திரு பெர்ணாண்டோவின் 31.12.96 இல் ஐந்தொகை

	ரூபா		ரூபா
மூலதனம்	522000	நிலையான சொத்துக்கள்	
தேறியலாபம்	82950	கட்டிடங்கள்	270000
	604950	தளபாடங்கள்	93000
எடுப்பனவுகள் 10800 + 39150	(49950)	நடைமுறைச்சொத்துக்கள்	
	555000	இறுதி இருப்பு	117900
நடைமுறைப் பொறுப்புக்கள்		கடன்படுநர்	64350
கடன்கொடுநர்	68550	காசு	78300
	623550		623550

குறிப்பு :
ஆரம்ப + மூலதனம், ஆரம்ப + ஐந்தொகையின் மூலம் கணிக்கப்பட்டது. பற்று ஐந்தொகையை சமபடுத்துவதன் மூலம் கணிக்கப் பட்டதாகும். பற்றினை கணிப்பதற்கு காசு கணக்கு தயாரிக்கவேண்டியது அவசியம் இல்லை

செய்கை

1.1.96 இல் ஐந்தொகை

	ரூபா		ரூபா
மூலதனம்	522000	கட்டடம்	270000
கடன்கொடுத்தோர்	74850	தளபாடம்	93000
		இருப்பு	127500
		கடன்பட்டோர்	36450
		காசு	69900
	596850		596850

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு

	ரூபா		ரூபா
காசு	965100	மீதி	74850
கீழ் சென்றது	68550	கொள்வனவு	958800
	1033650		1033650

காசுக் கணக்கு

	ரூபா		ரூபா
மீதி	69900	சம்பளம்	90300
கடன்பட்டோர்	1219500	சில்லறைச் செலவு	31500
		கடன்கொடுத்தோர்	965100
		எழுதுகருவி	17100
		வாடகை	36000
		பற்று	*39150
		தொலை பேசி	21600
		மின் கட்டணம்	10380
		கீழ் கொ. சென்றது	78300
	1289400		1289400

கடன்கட்டுபாட்டுக் கணக்கு

	ரூபா		ரூபா
மீதி	36450	காசு	1219500
விற்பனை	1247400	கீழ் சென்றது	64350
	1283850		1283850

*குறிப்பு :
காசுக் கணக்கு குறிப்பிட்டு கேட்கப்படாததனால் காசுக்கணக்கு தயாரிக்க வேண்டியது அவசியம் இல்லை. காசுக்கணக்கில் பற்று சமப்படுத்துவதால் பெறப்பட்டதாகும்.

(ஈ)

பொது நாட்குறிப்பு

திகதி	விபரம்	வரவு	செலவு
	இலாபநட்டக் கணக்கு	490	
	தொங்கற் கணக்கு		490
	(இறைகணக்கில் ஆரம்ப மீதி பதியாமை திருத்தப்பட்டது)		
	தொங்கற் கணக்கு	90	
	விநியோகஸ்தர் கணக்கு		90
	(விநியோகஸ்தர் கணக்கில் குறைவாகப் பதிந்ததைத் திருத்தியமை)		
	உபகரணங்கள் கணக்கு	9800	
	இலாபநட்டக் கணக்கு		9800
	(தவறாகக் கொள்வனவு கணக்கில் பதியப்பட்டதை உபரணக் கணக்கில் பதிந்தமை)		
	இலாபநட்டக் கணக்கு	1960	
	பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு		1960
	(உபகரணம் தொடர்பான தேய்மான ஏற்பாட்டிற்குப் பதிவு)		
	கையிருப்புக் கணக்கு	2171	
	இலாபநட்டக் கணக்கு		2171
	(பதிவுசெய்யப்படாத இருப்பைப் பதிந்தமை)		
	தொங்கல் கணக்கு	1000	
	இலாபநட்டக்கணக்கு		1000
	(தவறவிடப்பட்ட பெற்றவாடகை பதிந்தமை)		
	இலாபநட்டக் கணக்கு	100	
	தொங்கற் கணக்கு		100
	(கூலிக் கணக்கில் செலவுப்பக்கம் குறைத்து எழுதியதைத் திருத்தியமை)		

தொங்கற் கணக்கு

	ரூபா		ரூபா
இலாநட்டக்கணக்கு (விநியோகம்)	90	மீதி	500
இலாநட்டக்கணக்கு (வாடகை)	1000	இலாநட்டக்கணக்கு (இறை)	490
		இலாநட்டக்கணக்கு (கூலி)	100
	1090		1090

குறிப்பு :
* தொங்கல் கணக்கு மீதி ரூபா 500 சமப்படுத்துவதால் பெறப்பட்டதாகும்

சரண நிறுவனத்தின் இலாப சீராக்கற் கூற்று

	ரூபா	ரூபா
30-497 இல் இலாபம்		78260
கூட்டு உபகரனகொள்வனவு	9800	
தவறிய இருப்பு	2171	
தவறிய வாடகை	1000	12971
		91231
கழி		
தவறிய இறை	490	
உபகரனதேய்வு	1960	
கூலி	100	2550
திருத்திய தேறிய இலாபம்		88681

குறிப்பு :

* முன்வரையப்பட்ட இலாபநட்டகணக்கு என்பது பரீட்சைமீதியில் இருந்து நேரடியாக தயாரிக்கப்படுவதாகும். விரைவாக முடிவுக்கணக்குகளை தயாரிப்பதற்காக பரீட்சை மீதியில் இருந்து முன்வரையப்பட்ட இலாபநட்ட கணக்கு தயாரிப்பதற்கான தகவல்கள் பெறப்படுகின்றன.

* உண்மையில் இலாப நட்ட கணக்குகள் செலவு, வருமானக் கணக்குகளை மூடப்பட்டே தயாரிக்கப்படுகின்றன. அவ்வாறு முடிவுக்கணக்குகள் தயாரிக்கப்படுமாயின் விடைகுறிப்பில் உள்ள (5) ஆவது விடையானது தேறிய இலாபத்தை பாதிக்காது என்பதை மாணவர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

* * * * *

(6)

(அ)
1. பெறுமானத் தேய்வு என்பதன் பொருள் என்ன? (1 புள்ளி)
2. பெறுமானத் தேய்வின் தொகையைத் தீர்மானிப்பதில் கருத்திற் கொள்ளத்தக்க ஏதுக்கள் எவை? (1 1/2 புள்ளிகள்)
3. இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 08 குறிப்பிட்டதற்கிணங்க பெறுமானத்தேய்வு அடையக்கூடிய சொத்துக்களின் பண்புகள் யாவை?

(1 1/2 புள்ளிகள்)

(ஆ) வரையறுக்கப்பட்ட அனில் கம்பனி ரூபா 70000 பெறுமதியான வாகனமொன்றை கொள்வனவு செய்தது. வாகனத்தின் பயன்பாட்டுக்குரிய ஆயுட்காலம் 6 வருடங்களென மதிகப்படப் பட்டதோடு எஞ்சியபெறுமானம் ரூபா 10000 எனவும் கொள்ளப்பட்டது. எனினும். இரண்டு ஆண்டுகளின் பின் வாகனத்தின் பயன்பாட்டுக்குரிய ஆயுள் இன்னும் 2 அண்டுகள் மட்டும் எனக் கணக்கிடப்பட்டது. வாகனமானது நேர்க்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வுக்குள்ளானதெனக் கருத்திற்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. பெறுமானத் தேய்வுஏற்பாட்டு கணக்கில் இரண்டாம் இறுதியில் உள்ள தொகை யாது. (1 புள்ளி)
2. இரண்டாம்ஆண்டு முடிவில் வாகனத்தின் பெறுமானத் தேய்வு அடையக்கூடிய (Dipriciate Value) மதிப்பு என்ன? (1 புள்ளி)
3. மூன்றாம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி என்ன? (1 புள்ளி)
4. மூன்றாம் ஆண்டின் முடிவில் வாகனம் ரூபா 10000 இற்கு விற்கப்பட்டால் இக்கொடுக்கல் வாங்கலின் மீதான இலாப நட்டம் என்ன? (1 புள்ளி)
5. 4இல் கூறப்பட்டதற்கு நாட்குறிப்புப் பதிவுகள் எழுதுக.

(இ) சப்புமல் ஆடைத் தொழிற்சாலையின் கணக்காளர் வியபார கடன்பட்டோர் மீதிகள் சம்பந்தமாக பின்வரும் வயதுப் பகுபாய்வைக் கண்டார்.

விற்பனையிலிருந்து வெளிநிற்கும் காலம்	கடன்பட்டோர் மீதிகள்
00-30 நாட்கள்	300000
31-60 நாட்கள்	160000

61-90 நாட்கள்	80000
91-120 நாட்கள்	60000
120 அற்கும் மேல்	30000

நிறுவனத்தின் கடந்தகால அனுபங்களின் வழியாக கடன்பட்டோர் தொடர்பில் பின்வரும் நிகழக்கூடிய நட்டங்களின் வீதம் மதிப்பிடப்பட்டது.

31 - 60 நாட்கள்	2%
61 - 90 நாட்கள்	4%
91 - 120 நாடகள்	6%
120 இற்கு மேல்	10%

கீழ்உள்ள நிலைமைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது என்பதைக் கருத்திற்கொள்ளவும்.

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கில் உள்ள மீதி என்னவாக இருக்கும்? (2 புள்ளிகள்)
2. ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகளில் உள்ள மீதி ரூபா 15000 கீழே கொண்டுவரப்பட்டதாக கருத்திற்கொண்டு. ஐயக் கடன்கணக்கு ஏற்பாட்டைத் தயாரிக்க. (2 1/2 புள்ளிகள்)
3. கடன்பட்டோரின் 120 நாட்களுக்கு மேற்பட்ட வெளிநிற்கும் வகையைச் சேர்ந்த ரூபா 20000 இற்கு எட்டிய தொகையான அனிலின் மொத்த மீதி முழுவதுமே அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிப்பதென முடிவுசெய்யப்பட்டது. அறவிடமுடியா ஐயக்கடன் கணக்கிற்கான ஏற்பாடுகளிலுள்ள மீதி ரூபா 12000 எனக் கருத்தில்கொண்டு அறவிடமுடியா ஐயக்கடன் கணக்கிற்கான ஏற்பாட்டைத் தயாரிக்குக. (2 1/2 புள்ளிகள்)

(06 புள்ளிகள்)

(மொத்த 16 புள்ளிகள்)

விடை

(6)

(அ)

1. ஏதாவது தொட்டுணரக்கூடிய நிலையான சொத்துக்களின் கொள்வனவு கிரயத்தை அதன் பயன்பாடு பொருளியற் ஆயுட்காலத்திற்கு கிரமமான அல்லது தொழிநுட்ப அடிப்படையில் பகிர்தலாகும்.

2. 1. சொத்தின் பயன்பாடு சிக்கன ஆயுட்காலம்
   2. சொத்தின் கிரயம்
   3. சொத்தின் இழிவு பெறுமதி

3. பெறுமானத்தேய்விடத்தக்க சொத்துக்கள் பின்வரும் பண்புகளை நிறைவுசெய்யும் தொட்டுணரக்கூடிய அல்லது உருவகச் சொத்தக்களாகும்.
   1. வியாபார நிறுவன ஒன்றினால் புதிய பொருள் உற்பத்தி முயற்சி தொடர்பாக அல்லது பொருட்கள், சேவைகளை விநியோகிப்பதற்கு அல்லது வாடகைக்கு விடுவதற்கு அல்லது நிர்வாக தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு அல்லது நிறுவனத்தின் சொத்துக்களை பராமரிப்பதற்கு பயன்படுத்தப்படும் சொத்துக்கள்.
   2. மீள விற்பனைக்கோ அன்றி நுகர்வுக்கோ பயன்படுத்தப்படாமல் நிலையான பாவனைக்கு பயன்படுத்தப்படும் சொத்துக்கள்
   3. ஒரு நிதியாண்டுக்கு மேல் பாவிக்கும் நோக்குடன் கொள்வனவு செய்த சொத்துக்கள்
   4. ஒரு வரையறுக்கப்பட்ட பொருளியல் (சிக்கன) நீதியான பயன்படு காலம் (ஆயுள்) கொண்டதான சொத்துக்கள்

(ஆ)

1. $\frac{70000 - 10000}{6} = 10000$

   ∴ ஒரு ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு = 10000

   இரண்டாம் ஆண்டு இறுதியில் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக்கணக்கு மீதி

   10000 x 2 = 20000

2. இரண்டாம் ஆண்டு இறுதியில் வாகனத்தின் பெறுமானத்தேய்வு மதிப்பு அடையக்கூடிய மதிப்பு

   60000 - 20000 = 40000

குறிப்பு :
பெறுமானத் தேய்வு அடையக்கூடிய மதிப்பு என்பது இன்னும் பெறுமானத் தேய்வு செய்யப் படக்கூடிய ஆகக்கூடிய பெறுமதியை குறிக்கும்

3. $\frac{40000}{2} = 20000$

∴ மூன்றாம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு 20000 ஆகும்

குறிப்பு :

சொத்தின் கிரயம்	70000
இறுதிப் பெறுமதி	10000
	60000
பெறுமானத்தேய்வு $\frac{60000 \times 2}{6}$	(20000)
பெறுமானத்தேய்விடக்கூடிய மிகுதிப் பெறுமதி	40000

அடுத்த 2 ஆண்டுகள் தொடர்பாக ஒரு ஆண்டுக்குப் பதிவழிக்கக்கூடிய பெறுமதி

$\frac{40000}{2} = 20000$

4. நட்டம் ரூபா 20000

வாகன அகற்றும் கணக்கு

	ரூபா		ரூபா
வாகன கணக்கு	70000	காசு	10000
		தேய்வு ஏற்பாடு	40000
		நட்டம் (இ / ந)	20000
	70000		70000

5. **நாட்குறிப்பு பதிவுகள்**

	வரவு	செலவு
வாகன அகற்றும் கணக்கு	70000	
வாகன கணக்கு		70000
(சொத்தின் கிரயம் மாற்றப்பட்டது)		
பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு (10000+10000+20000)	40000	
வாகன அகற்றும் கணக்கு		40000
(பெறுமானத்தேய்வு ஏற்பாடு மாற்றப்பட்டமை)		
காசுக்கணக்கு	10000	
வாகன விற்பனைக் கணக்கு		10000
(வாகன விற்பனையால்கிடைத்த காசுக்குப் பதிவு)		
இலாப நட்டக் கணக்கு	20000	
வாகன விற்பனைக் கணக்கு		20000
(விற்பனை நட்டத்திற்குரிய பதிவு)		

(இ) 1. $160000 \times \frac{2}{100} = 3200$

$80000 \times \frac{4}{100} = 3200$

$60000 \times \frac{6}{100} = 3600$

$30000 \times \frac{10}{100} = 3000$

13000

2. **ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு**

	ரூபா		ரூபா
இலாபநட்டக் கணக்கு	2000	மீதி	15000
மீதி சென்றது	13000		
	15000		15000
		மீதி வந்தது	13000

3. ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு

	ரூபா		ரூபா
கடன்படுனர்	20000	மீதி.வந்தது	12000
மீதி. சென்றது *	11000	இலாபநட்டக் கணக்கு	19000
	31000		31000
		மீதி.வந்தது	11000

குறிப்பு :

* வினாவின் 3வது பகுதி தொடா்பில் அறவிடமுடியா ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு ஆனது நடைமுறையில் இல்ல, ஒரு கணக்காகும் எனவே விடை குறிப்பில் அக்கணக்கிற்கு பதிலாக ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கே தரப்பட்டுள்ளது.

* வினாவின் 3வது பகுதிக்கானவிடையில் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு இறுதி மீதி பின்வருமாறு பெறப்பட்டதாகும்.

$$160000 \times \frac{2}{100} = 3200$$

$$80000 \times \frac{4}{100} = 3200$$

$$60000 \times \frac{6}{100} = 3600$$

$$(30000 - 20000) = 10000 \times \frac{10}{100} = 1000$$

11000

* * * * *

பகுதி II

முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக. ஒவ்வொரு விடையுடனும் பொருத்தமான செயன்முறைகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

(1) வரையறுத்த "சுபுன்" நிறுவனம் ஒவ்வொன்றும் ரூபா 10 ஆன 40000 சாதாரன பங்குகளையும் ஒவ்வொன்றும் ரூபா 10 ஆன 20000, 20% மீட்க்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளையும் கொண்டிருந்தது. (இவை ஒவ்வொன்றும் ரூபா 2 வட்டத்தில் மீட்கத்தக்கவை). வியாபாரக் கணக்கைத் தயாரித்த பின்னர் 1997.03.31இல் இருந்தவாறான பரீட்சைமீதி கீழே தரப்பட்டுள்ளது.

	வரவு ரூபா	செலவு ரூபா
சாதாரண பங்குமூலதனம்	-	300000
20% மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குமூலதனம்	-	200000
பொது ஒதுக்கீடு	-	175000
1996.04.01 இல் இருந்தவாறான இலாப நட்டக்கணக்கு	43200	-
பங்குவட்டம்	-	5000
கிரயத்தில் காணியும் கட்டடங்களும்	850000	-
கிரயத்தில் பொறிவிருட்சமும் பொறித் தொகுதியும்	510000	-
கிரயத்தில் மோட்டார் வாகனங்கள்	160000	-
கடன்கொடுத்தோர்	-	36400
கடன்பட்டோர்	20800	.
தேய்மானத்திற்கான ஏற்பாடு 1996.04.01		
பொறிவிருட்சமும் பொறிதொகுதியும்	-	320000
மோட்டார் வாகனங்கள்	-	48000
15% கடன் பத்திரங்கள் (திபெஞ்சர்)	-	120000
1997.03.31இல் உள்ளவாறு தொக்குகள் (இருப்பு)	128000	-
மொத்த இலாபம்	-	990 250
1996.04.01 வரிகளுக்கான ஏற்பாடுகள்	-	61000
செலுத்தப்பட்ட வரி 95/96	55000	-
96/97	157 500	-
செலுத்தப்பட்ட பங்கிலாபம் (மொத்தம்)		
முன்னுரிமைப் பங்கு	20000	
சாதாரண பங்கு	40000	
பூர்வாங்கச் செலவுகள்	1500	-
வங்கி மேலதிகப்பற்று	-	68000
நிர்வாகச் செலவுகள்	143 800	-
விற்பனை விநியோகச் செலவுகள்	107 850	-
ஏனைய செலவுகள்	53 200	-
ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு 1996.04.01	-	3200
பங்கு மீட்புக் கணக்கு	36000	-
	2326850	2326850

பிற தகவல்கள்

1. 5000 மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்குகள் 1996.09.30 இல் மீட்கப்பட்டன. ஒவ்வொன்றும் ரூபா 12 வீதம் 2000 சாதாரண பங்குகள் இம் மீட்புத்தேவைக்காக வழங்கப்பட்டன. முன்னுரிமைப் பங்குகளை மீட்பதற்காக செலுத்தப்பட்ட காசும் புதிய பங்குகளை வழங்கியதன் மூலம் பெற்ற காசும் காசுப் புத்தகத்திலிருந்து பங்கு மீட்புக் கணக்குக்கு மாற்றப்பட்டன. இதனைத் தவிர இக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக எந்த வித பதிவும் செய்யப்படவில்லை.

2. ஆண்டுப் பெறுமானத்தேய்வு பின்வருமாறு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். பொறிவிருட்சம் பொறி தொகுதியும் குறைத்தெழுதிய பெறுமானத்தின்மீது 10%, மோட்டர் வாகனங்கள் கிரயத்தின்மீது 15%

3. 1997.03.31 இல் நின்ற செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.
கணக்காய்வுக் கட்டணம் ரூபா 15000
ஊழியர்களுக்கான போனஸ் ரூபா 60000
பணிப்பாளரின் கட்டணம் ரூபா 25000

4. 1995/1996 இதற்கான இறுதி வருமான வரிப்பொறுப்பு ரூபா 55000 1996/1997 ஆண்டிற்கான வருமான வரி ரூபா 215500 என மதிப்பிடப்பட்டுள்ளது.

5. ஆண்டுக்கான வியாபாரப் புரள்வு ரூபா 2500000

6. ரூபா 150000 பெறுமதியான கட்டிடமொன்று இவ்வாண்டில் தீப்பிடித்து முற்றாக அழிந்தது. இச்சேதத்துக்காகக் காப்புறுதிக் கம்பனியால் ரூபா 95000 நட்டஈட்டு கோரிக்கை ஏற்கப்பட்டது. கணக்கேடுகளில் இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எதுவித பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

6. ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு கடன்பட்டோரில் 10% ஆகச் செம்மையாக்கஞ் செய்யப்பட வேண்டும்.

7. பணிப்பாளர்கள் பின்வரும் முடிவுகளைச் செய்தனர்.

அ) 1996.03.31 இல் வைத்திருக்கப்பட்டபடி 20 சாதாரண பங்குகளுக்கு ஒரு சாதாரண பங்கு போனஸ்சாக வழங்குதல். (உபாகரப்பங்கு வழங்கல்)

(இந்த போனஸ் பங்குகள் 1996/97 இற்கான பங்கு இலாபத்துக்குரித்தாகா)

ஆ) ரூபா 15000ஐ பொது ஒதுக்கீட்டுக்கு மாற்றுதல்

இ) சாதாரண பங்குகளுக்கும் 15% இறுதிப் பங்கிலாபத்தையும் முன்னுரிமைப் பங்குக்காக மீதிப் பங்கிலாபத்தையும் (பங்கிலாப வரியைப் புறக்கணிக்கவும்) பிரகடனப்படுத்தல்

பின்வருவனவற்றை தயாரிக்குமாறு நீர்கேட்கப்படுகின்றீர்.

1. பின்வரும் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்வதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்
 அ. முன்னுரிமைப் பங்குகளின் மீட்பும், சாதாரண பங்குகளின் வழங்கலும் (6 புள்ளிகள்)
 ஆ. உபகார பங்குவழங்கல் (1 1/2 புள்ளிகள்)
2. பிரசுரிப்பதற்கு உகந்தவகையில் 1997.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கும் 1997.03.31 இல் இருந்தவாறான ஐந்தொகையும் (27 1/2 புள்ளிகள்)
3 முன்னுரிமைப்பங்குகளை மீட்பதில் ஒரு மூலதன மீட்பொதுக்க நிதிக்கணக்கை உருவாக்குவதன் நோக்கம் என்ன? (1 புள்ளி)

(36 புள்ளிகள்)

விடை

(1)

(அ)

நாட்குறிப்பு

விபரம்	வரவு	செலவு
பங்கு மீட்புக்கணக்கு	24000	
சாதாரண பங்கு மனுஒதுக்கற் கணக்கு		24000
(சாதாரண பங்கு வழங்கலால் பெற்றபணம் பங்குமீட்புக்கணக்கிற்கு மாற்றப்பட்டது)		
சாதாரண பங்கு மனுஒதுக்கற் கணக்கு	24000	
சாதாரணபங்கு முதல் கணக்கு		20000
பங்கு வட்டக்கணக்கு		4000
(மனுஒதுக்கல்கணக்கிலிருந்து உரிய கணக்குகணக்கு மாற்றப்பட்டது)		

20% மீட்கத்தக்க முன்னுரிமை பங்கு முதற்கணக்கு	50000	
முன்னுரிமை பங்கு மீட்பு கணக்கு		50000
(மீட்கப்பட்ட முன்னுரிமை பங்குகளின் முகப் பெறுமதியானது முன்னுரிமை பங்கு மீட்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டமை)		
பங்கு வட்டக் கணக்கு (5000 + 4000)	9000	
பொது ஒதுக்கற் கணக்கு / இலாப நட்டக் கணக்கு	1000	
முன்னுரிமை பங்கு மீட்புக் கணக்கு		10000
(தேவையான வட்டத்தை முன்னுரிமைப்பங்கு மீட்புக் கணக்கிற்கு மாற்றியமை)		
முன்னுரிமை பங்கு மீட்புக் கணக்கு	60000	
பங்கு மீட்புக்கணக்கு		60000
(முன்னுரிமைப் பங்குகளை மீட்புக்காக கொடுத்தகாசை முன்னுரிமை பங்கு மீட்புக்கணக்கிற்கு மாற்றியமை)		
பொது ஒதுக்கற் கணக்கு/ இலாபநட்டக் கணக்கு	30000	
மூலதன மீட்பு ஒதுக்க நிதிக்கணக்கு		30000
(மீட்கப்பட்ட முன்னுரிமை பங்குகளின் முகப் பெறுமதிக்கு சமமான தொகையை மூலதன மீட்பு ஒதுக்க நிதிக்கணக்கிற்கு மாற்றியமை)		

குறிப்பு :

1. விடையின் 4வது உருப்படிக்கான விளக்கக்குறிப்பு பங்கு மீட்பின் போது பங்குகள் வட்டத்துடன் மீட்கப்படுமாயின் மீட்புவட்டமாகிய நட்டம் பங்குவட்டக்கணக்கில் இருந்து பதிவழித்தல் வேண்டும் பங்குவட்டம் போதுமாக இல்லாதிருந்தால் இலாப நட்டக் கணக்கில் இருந்து பதிவழித்தல் வேண்டும்.
2. மூலதனமீட்ப்பு ஒதுக்கநிதி பொது ஒதுக்கம் அல்லது இலாப நட்டக்கணக்கில் இருந்தும் உருவாக்கலாம். இவ்விடைக் குறிப்பில் பொது ஒதுக்கத்தில் இருந்து மூலதன ஒதுக்க நிதி உருவாக்கப்பட்டுள்ளது.
3. பங்கு மீட்பு தொடர்பாக கொடுக்கப்பட்ட காசு பங்கு வழங்கல் தொடர்பாக பெறப்பட்ட காசு என்பன பெறப்பட்டு பங்கு மீட்பு கணக்கில் இரட்டை பதிவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் விடை குறிப்பில் உருப்படி 1, 5 என்பவற்றில் காசு / வங்கி என்பதற்கு பதிலாக பங்குமீட்பு என்று எழுதுவதே சரியாகும்.

நாட்குறிப்பு வரவு செலவு

மூலதன மீட்பு ஒதுக்க நிதிக்கணக்கு	15000	
உபகார பங்குவழங்கற் கணக்கு		15000
(மூலதன மீட்பு ஒதுக்க நிதியை உபகாரப்பங்கு வழங்கப் பயனுன்படுத்தியமை)		
உபகார பங்கு வழங்கற் கணக்கு	15000	
சாதாரணப்பங்கு முதற்கணக்கு		15000
(உபகாரப்பங்குகளை மூலதனமாக்கியமை)		

வரையறுத்த "சுமன்" நிறுவனத்தின் 1997.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கணக்கு

	ரூபா	ரூபா	ரூபா
ஆண்டுக்கான வியாபாரப் புரள்வு			2500000
ஆண்டுக்கான தேறிய வியாபார இலாபம்			525520
கழி			
ஆண்டுக்கான இலாபத்தின் மீதான வருமான வரி		215500	
கூட்டு			
மிகை வருமான வரி		6000	(209500)
வரிக்குப்பின் ஆண்டிற்கான இலாபம்			316020
கழி			
அசாதாரண கட்டிடங்களின் மீதான நட்டம்			(55000)
வருமானவரி அசாதாரண விடயம் கழித்த பின் இலாபம்			261020
கழி			
பகிர்வுகள்			
பொது ஒதுக்கத்திற்கு மாற்றியது		15000	
செலுத்திய பங்குஇலாபம் (மொத்தம்)			
முன்னுரிமைப்பங்குகள்	20000		
சாதாரணபங்குகள்	40000	60000	
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம்			
முன்னுரிமைபங்குகள்	15000		
சாதாரணப்பங்குகள்	46500	61500	(136500)
			124520
கழி			
1.4.96 இல் இலாபநட்டக்கணக்கு மீதி			(43200)
			81320

குறிப்பு :

ஆண்டுக்கான தேறியலாபம் பின்வரும் செலவுகளை கழித்தபின் பெறப்பட்டதாகும்.

	ரூபா
பணிப்பாளர் கட்டணம்	25000
நிலையான சொத்து தேய்மானம்	43000
வட்டி	18000
கணக்காய்வுக் கட்டணம்	15000

குறிப்பு :

சாதாரன பங்கு (இறுதி) பங்கிலாப கணிப்பு

$$\frac{300000}{100}\times 15+\frac{20000}{100}\times 15\times\frac{6}{12}=46500$$

பங்குமீட்புக்காக வழங்கிய பங்குகளுக்கு 1/2 வருடத்துக்கே பங்கு இலாபம் பிரகடனம் செய்ய வேண்டும் என்பதைக் கவனிக்க.

வரையறுத்த "சுமன்" நிறுவனம் 1997 .3.31 இல் உள்ளவாறான ஐந்தொகை

நிலையான சொத்து	கிரயம்	திரண்ட தேய்மானம்	தேறிய பெறுமதி
காணிகட்டடம்	700000	-	700000
பொறிவிருட்சம் பொறிதொகுதி	510000	339000	171000
மோட்டார் வாகனங்கள்	160000	72000	88000
	1370000	411000	959000
நடைமுறைச் சொத்து			
சரக்கிருப்பு		128000	
கடன்பட்டோர்	20800		
கழி			
ஐயக்கடன் ஏற்பாடு	(2080)	18720	
கட்டிட காப்புறுதி கோரிக்கை		95000	
		241720	
கழி			
நடைமுறைபொறுப்பு			
கடன்கொடுனர்	36400		
கணக்காய்வுக்கட்டணம்	15000		
ஊழியர்களுக்கான போனஸ்	60000		
பணிப்பாளர் கட்டணம்	25000		
96/97 வரி பொறுப்பு	58000		
பிரேரிக்கப்பட்ட பங்கிலாபம் (மொத்தம்)	61500		
வங்கி மேலதிகப் பற்று	68000		
தொகுதிக்கடன் வட்டி	18000	(341900)	
தேறிய நடைமுறைச் சொத்துக்கள்			100180
			858820

நிதியால் பிரதிப்பலிப்பை

	அனுமதித்தது	வழங்கியது
பங்குமூலதனம்		
ஒவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான 40000 சாதாரனபங்கு	400000	335000
ஒவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான 20% முன்னுரிமை பங்கு	200000	150000
	600000	485000
ஒதுக்கங்கள்		
மூலதன மீட்பு ஒதுக்கநிதி	15000	
பொது ஒதுக்கம் (175000 + 15000 - (30000 + 1000)	159000	
இலாப நட்டக் கணக்கு	81320	
	255320	
கழி		
கற்பனைச் சொத்து		
பூர்வாங்கச் செலவுகள்	1500	253820
நீண்டகால பொறுப்பு		
15% கடன் பத்திரங்கள்		120000
		858820

குறிப்பு :

1. 30.9.96 இல் 5000 மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்குகள் 2 ரூபா வட்டத்துடன் மீட்பதற்காக 2000 சாதாரணப் பங்குகள் 12 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளன.
2. 31.12.96 இல் வைத்திருக்கப்பட்ட 20 சாதாரணப்பங்குகளுக:கு ஒரு சாதாரணபங்கு என்றவிகிதத்தில் உபகாரப்பங்குகள் வழங்கப்பட்டன.

செய்கை (1)

ஆண்டிற்கான தேறிய வியாபார இலாப கணிப்பீடு

தரப்பட்டுள்ள ஆண்டுக்கான மொத்த இலாபம்		990250
கூட்டுக. மிகை ஐயக்கடன் ஏற்பாடு		1120
		991370
கழி :		
பொறி தேய்வு	19000	
மோட்டார் வான் தேய்வு	24000	
கணக்காய்வு கட்டணம்	15000	
ஊழியர்களுக்கான போனஸ்	60000	
பணிப்பளர் கட்டணம்	25000	
கடன்வட்டி	18000	
நிர்வாகச் செலவு	143800	
விற்பனை விநியோகச் செல்வு	107850	
ஏனைய செலவுகள்	53200	(465850)
		525520

செய்கை (2)

பொது ஒதுக்க கணக்கு

	ரூபா		ரூபா
பங்குமீட்பு கணக்கு (மீட்பு வட்டம்)	1000	மீதிவந்தது	175000
மூலதன மீட்பு ஒதுக்க நிதி	30000		
		இலாப நட்டக் கணக்கு	15000
மீதி கீழ். சென்றது	159000		
	190000		190000
		மீதி கீழ் வந்தது	159000

(ஆ) மூலதன மீட்பு ஒதுக்க நிதி உருவாக்கப்படுவதன் நோக்கம்

1. கடன் தொடுத்தோரின் பாதுகாப்பின் உறுதிப்படுத்தல்
2. பங்குமீட்பினால் ஏற்படக்கூடிய மூலதனக் குறைவினைத் தடுத்தல்.

* * * * *

(2)

(அ) கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.

1. ஆண்டறிக்கையொன்றில் நிதிப்பாய்ச்சற் கூற்றொன்றை அல்லது காசுப்பாய்ச்சல் கூற்றொன்றை சேர்த்துக் கொள்வதன் குறிக்கோள் என்ன? (2 புள்ளிகள்)

2. எதிர்வுகூறல் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் போது கணக்கீட்டு விகிதத்தின் குறைபாடுகளில் ஒன்றைப்பற்றி விளக்குக. (2 புள்ளிகள்)

(ஆ) ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைக் குறிப்பிடுக. (வினா இலக்கத்தை அடையாளங்கண்டு விடையின் இலக்கத்தை அதன் எதிரே குறிப்பிடுக.)

1. காசுப்பாய்ச்சல் கூற்று மூலம் தரப்படும் ஒருவகை தகவல்
   1. கம்பனியின் இலாபம்
   2. வியாபார நடவடிக்கையிலிருந்து எழும் தேறிய காசுப் பாய்ச்சலானது தேறிய இலாபத்திலிருந்து வேறுபடுவதற்கான காரணங்கள்
   3. எதிர்காலத்தில் நீண்டகாலக் கடன்களை மீளக்கொடுப்பனவு செய்வதில் கம்பனியின் ஆற்றல்.
   4. வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படும், மொத்த விற்பனையும் காசுப்பெறுகைகளும்

2. நீண்டகாலக் கடனின் ஒரு அளவு கோல் என்றமட்டில் பின்வருவனவற்றில் முக்கியமானது எது?
   1. தொழிற்படு மூலதன வீதம்
   2. கடன்பட்டோர்கள் கொடுப்பனவுக் காலம்
   3. கடன்கொடுத்தோர் அறவிடும் காலம்
   4. படுகடன் உரிமை வீதம்

3. பின்வருவனவற்றுள் கையிருப்பு உடைமைக் காலத்தைக் கணக்கிடும் சூத்திரம் எது?
   1. $\frac{\text{இருப்பு}}{\text{விற்பனை}} \times 12$

2. $\dfrac{\text{இருப்பு}}{\text{விற்கப்பட்ட பொருட்களின் கிரயம்}} \times 12$

3. $\dfrac{\text{விற்கப்பட்ட பொருட்களின் கிரயம்}}{\text{இருப்பு}} \times 12$

4. $\dfrac{\text{விற்பனை}}{\text{இருப்பு}} \times 12$

4. காசுப்பாய்ச்சற் கூற்று ஒன்று வெளிப்படுத்துவது
   1. காசுப் புத்தகத்தின் சுருக்கத்தினை
   2. இலாப நட்டக் கணக்கொன்றினை
   3. ஐந்தொகை ஒன்றினை
   4. வங்கிக் கூற்று ஒன்றினை (4 புள்ளிகள்)

(இ) "சில்வா" கம்பனியின் 1996.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட விபர கீழே தரப்பட்டுள்ளது.

<u>இலாப நட்டக் கணக்குத் தரவுகள்</u>

	ரூபா "000" களில்
விற்பனை	300
வட்டி	17
வருமானவரி	2
வரிக்கு முன் தேறிய இலாபம்	3
1996.12.31இல் உள்ளவாறு ஐந்தொகை விபரம்	
பொறிவிருட்சமும் பொறித் தொகுதியும்	100
கையிருப்பு	40
கடன்கொடுத்தோர்	30
காசு	6
கடன்பட்டோர்	30
பங்கு வழங்கல் மூலதனம்	60
ஒதுக்குகள்	5
10% திபெஞ்சர்	40

மேலேயுள்ள தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வீதங்களைக் கணக்கிட்டு அவை ஒவ்வொன்றையும் கணிக்க வேண்டியதன் குறிக்கோளைக் குறிப்பிடுக.

1. விரைவு வீதம்
2. இணைப்பு வீதம்
3. சொத்துக்கள் மீதான வருவாய் (3 புள்ளிகள்)

(ஈ) சேன கம்பனி 1996.12.31 இல் முடிந்த ஆண்டுக்கான பின்வரும் தரவுகளைத் தந்துள்ளது.

	ரூ. '000' களில்
1996.01.01இல் உள்ளவாறு காசும் வங்கியும்	904
1996.12.31இல் உள்ளவாறு காசும் வங்கியும்	2084
பொறிவிருட்சமொன்று கொள்வனவுக்காக செலுத்தப்பட்ட காசு	4200
குறுங்காலக் கடன்களிலிருந்து கிடைத்த தொகை	200
ஊழியர்களுக்கு காசாகக்கொடுக்கப்பட்ட கடன்	100
ஊழியர்களின் கடன்களிலிருந்து பெறப்பட்டவை (வட்டி நீங்கலாக)	200
வட்டி பங்கிலாபம் ஆகியவற்றின மீதான காசுப் பெறுகை	340
வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட காசு	15900
பொறிவிருட்சமொன்றின் விற்பனையிலிருந்து கிடைத்ததொகை	1800
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	1300
வழங்குனர், ஊழியர்களுக்காகக் கொடுக்கப்பட்ட காசு	12700
செலுத்தப்பட்ட வட்டி	380
செலுத்தப்பட்ட வருமானவரி	1420
காசு விற்பனை	~~2480~~ 2840

மேலேயுள்ள தரவுகளைப் பயன்படுத்தி 1996.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசு பெறுவனவுகளையும் கொடுப்பனவுகளையும் காட்டுகிற கூற்று ஒன்றைத் தயாரிக்குக. செயற்பாட்டுநடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள், நிதியிடல் நடவடிக்கைகள் என்பவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு பற்றித் தனியாகக் குறிப்பிடுக. (காசுப் பாய்ச்சல் கூற்று)

(5 புள்ளிகள்)

ஆசிரியர் குறிப்பு :

வினாபத்திரத்தின் படி (ஈ) பகுதிவினாவில் காசு விற்பனை ~~2480~~ 2840 ரூபா தரப்படவில்லை ஆனால் காசு விற்பனை 2480 ரூபா தரவு சேர்க்கபடும் போதே வினா அமைப்புசரியாகும். எனவே காசுவிற்பனை 2480 ரூபா [illegible]ட்ட கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

விடை

(2)

(அ)

1. ஆண்டறிக்கை ஒன்றில் காசுப்பாச்சல் கூற்றினைச் சேர்த்துக் கொள்வதன் குறிக்கோள் யாதெனில்
இலாபநட்டகணக்கு ஐந்தொகை என்பவற்றில் உள்ள விபரங்களின் அடிப்படையில் நிறுவனத்தின் காசு உட்பாய்ச்சல், வெளிபாய்ச்சல் தொடர்பான தகவல்களை விளக்கமாகவும் விபரமாகவும் தகவல்களில் அக்கறை கொண்டுள்ள தரப்பினர்களுக்கு வழங்கவும், நிதி அல்லது காசு முகாமையை சிறப்பாக மேற்கொள்வதற்கான தீர்மானங்களை எடுத்துக் கொள்வதற்குமாகும்.

2. எதிர்வு கூறல் தொடர்பில் கணக்கீட்டு விகிதத்தின் குறைபாடுகள்
கணக்கீட்டுக் கொள்கைகள் ஒரு நிறுவனத்திற்குள்ளே வெவ்வெறு ஆண்டுகளுக்கிடையேயும் வேறுபடுகின்றன.

* முடிவுக்கணக்குகள்யாவும் பணவீக்கத்தைக் கருத்தில் கொள்ளது வரலாற்றுக்கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்படுவதனால் தகவல்கள் உண்மையாக அமையமாட்டாது. எனவெ இலாபநட்டக் கணக்கு ஐந்தொகை என்பவை மூலம் பெறப்படும் கணக்கீட்டு விகிதங்களின் அடிப்படையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தவறாக அமையலாம்.

(ஆ)
1. 2
2. 4
3. 2
4. 1

(இ)

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{திரவச் சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$$

$$= \frac{36000}{30000} = 1.2$$

நடைமுறைப் பொறுப்புக்களைத் தீர்க்கப் போதுமான திரவச் சொத்துக்கள் உள்ளனவா என்பதைக் கணக்கிடல்

2. $$\text{இணைப்பு விகிதம்} = \frac{\text{கடன் மூலதனம்}}{\text{உரிமை மூலதனம்}} = \frac{40000}{65000} = 0.61$$

அல்லது

$$= \frac{\text{கடன் மூலதனம்}}{\text{மொத்த மூலதனம்}} = \frac{40000}{105000} = .45$$

கடன் மூலதனத்துக்கும் உரிமையாளர் மூலதனத்துக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்தல் அல்லது கடன் மூலதனத்துக்கும் மொத்த மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்தல்.

3. சொத்துக்கள் மீதான வருவாய்

$$= \frac{\text{வரிவட்டிக்குமுன் தேறியலாபம்}}{\text{மொத்த சொத்துக்கள்}} \times 100$$

$$= \frac{20000}{176000} \times 100 = 11.3$$

நிறுவனத்தின் மூலதனமானது எவ்வாறு திறனான முறையில் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பான தெளிவைப் பெறுதல்

(ஈ) காசுப்பெறுவனவுகள், கொடுப்பனவுகள் காட்டும் கூற்று
(காசுப்பாச்சல் கூற்று)

<u>செயற்பாட்டு நடவடிக்கையில் தேறிய காசு</u>		
காசு விற்பனை		2840
கடன்பட்டோரிடம் பெறற் காசு		15900
வழங்குனர், ஊழியருக்கு கொடுத்தது		(12700)
செயற்பாட்டின் மூலம் உருவாக்கிய காசு		6040
செலுத்திய வருமான வரி	1420	
செலுத்திய வட்டி	380	(1800)
		4240

முதலீட்டுச் செயற்பாட்டில் தேறிய காசு		
பொறி விற்பனை	1800	
பொறி கொள்வனவு	(4200)	
ஊழியர் கடன் மூலம் பெற்றவை	200	
ஊழியருக்குக் காசாக் கொடுத்த கடன்	(100)	
வட்டி, பங்கிலாபம் பெற்றவை	340	(1960)
		2280
நிதியீட்ட செயற்பாட்டில் தேறிய காசு		
குறுங்காலக் கடன் பெற்றவை	200	
செலுத்திய பங்கிலாபம்	(1300)	(1100)
தேறிய காசில் ஏற்பட்ட அதிகரிப்பு		1180
01.01.96 இல் காசு வங்கி மீதி		904
31.12.96 இல் காசு வங்கி மீதி		2084

* * * * *

(3)

(அ) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக.

1. நிதிக்கணக்கீட்டிலிருந்து முகாமைத்துவக் கணக்கீடு எவ்வாறு வேறுபடுகின்றதென்பதைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2. செலவுக்கணக்கீட்டின் பங்களிப்பானது முகாமைத்துவக் கணக்கீட்டைவிட எவ்வாறு குறுகியதென்பதை விளக்குக. (2 புள்ளிகள்)

(ஆ) ஒவ்வொரு வினாவுக்குமான மிகச் சிறந்த விடையை எடுத்துக் காட்டுக. (வினாவின் இலக்கத்தைத் தெளிவாக எழுதி விடையின் இலக்கத்தை அதற்கெதிரே காட்டுதல் வேண்டும்.)

(1) ஒரு முகாமைத்துவக் கணக்கீட்டுமுறைமையினை பெரும்பாலும் ஒத்ததாக உருவாக்கப்பட்ட தகவல் துணுக்கானது

1. குறிப்பிட்டதொரு சந்தர்ப்பவேளையில் வியாபாரமொன்றின் தொழிற்படுமுதல்
2. ஆண்டின் விற்பனையான பண்டங்களின் கிரயம்
3. குறிப்பிட்டதொரு உற்பத்தியின் உற்பத்திக் கிரயம்
4. வியாபார நடவடிக்கையிலிருந்து உருவாக்கப்படும் காசு

(2) ஒரு காசுப் பாதீடு, என்பது

1. நிறுவனத்திற்கு வெளியிலுள்ள தீர்மானம் எடுப்போருக்கு விநியோகிக்கப்படும் ஒருமுறைசார் நிதிக்கூற்று
2. எதிர்காலங்களில் நிகழலாமென எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்களின் ஒரு எதிர்வு கூறல்
3. ஒருவருட காலத்துக்கு நிலையானதானமுழு வியாபாரத்தின் மொத்த காசுப்பாய்ச்சல் பற்றிய சுருக்கம்
4. நடைபெற்ற காசுக் கொடுக்கல்வாங்கல்களின் உண்மை விளைவுகளைப் பிரதிபலிக்கும் ஒரு கூற்று

(3) ஒரு நிறுவனத்தின் மொத்த உற்பத்திக் கிரயத்தின் வகைப்படுத்தலானது

1. நேர்க் கிரயங்களும், நேரில் கிரயங்களும்
2. பொருட் கிரயங்களும், உழைப்புக் கிரயங்களும்
3. உற்பத்தி ஆரம்பக் கிரயங்களும் உற்பத்தியாக்கப்படாத கிரயங்களும்
4. கிரயமும், புத்துருவாகும் பொருட் கிரயமும்

(4) மாறுங் கிரயம் என்பதன் கருத்து

1. வேறுபட்ட செயலியக்கத் தரங்களுக்கிடையேயும் மாறாதிருக்கின்ற கிரயங்கள்
2. செயலியக்க தரங்களின் மாற்றங்களின் விகிதத்திற்கேற்ப மாறுகின்ற கிரயங்கள்
3. கிரய அலகுகளின் கிரயத்தில் கண்டுபிடிக்கபட முடியாத கிரயத்தின் கூறுகள்.
4. பல்வேறுவகைப்பட்ட உற்பத்திகளுடன் இணைந்த கிரயங்கள் (4 புள்ளிகள்)

(இ) சுவைதயிர் (யோகட்) தயாரிப்பாளரான "மிஹிரி" கம்பனியால் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

	ஜன.	பெப்.	மார்ச்
1. உற்பத்தி அலகுகள் (பாதீடுசெய்யப்பட்டது)	20000	20000	24000
விற்பனை அலகு (பாதீடுசெய்யப்பட்டது)	12000	12000	18000

2. அலகுக்கான உற்பத்திக் கிரயங்கள்

	ரூபா சதம்
நேரடிப் பொருள்	08 . 00
நேரடி ஊழியம்	04 . 00
மாறும் மேந்தலைகள்	00 . 80

மாதாந்த நிலையான மேந்தலைகள் ரூபா 20000 (பெறுமானத் தேய்வு ரூபா 4000 உட்பட)

3. யோகற் கோப்பையொன்றின் விற்பனைவிலை ரூபா 10 காசுசேர்த்தல், விற்பனை மாதத்தில் 70% உம் மிகுதி விற்பனை மாதத்தினை தொடர்ந்துவரும் மாதத்திலும் பெறப்படும்.
4. ஆரம்ப கையிருப்பு எதுவுமிருக்கவில்லை.
5. நேரடிப் பொருட்களின் முடிவுக் கையிருப்பானது அடுத்தமாத உற்பத்தித் தேவையின் 50% ஆகும்.
6. மாதாந்த விற்பனை நிர்வாகம் (நிலையான) தொடர்பான செலவுகள் 6000 ரூபா ஆகும்
7. நேரடிப் பொருட்களுக்கான எல்லாக் கொடுப்பனவுகளும் கொள்வனவு மாதத்திலேயே செய்யப்பட்டன.
8. ஏனைய சகல செலவுகளும் அவை நிகழ்ந்த மாதத்திலேயே கொடுக்கப்பட்டன.

மாதாந்த நிரல்களுடனான ஜனவரி - மார்ச் வரையிலுள்ள காலப்பகுதிக்குரிய, காசுப் பாதீட்டைத் தயாரிக்கும்படி நீர் கேட்கப்படுகின்றீர்? (8 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

விடை

(3)

(அ)

1. கணக்குகளைப் பயன்படுத்தும் வெளிகட்சியினருக்கு ஆண்டுதோறும் தரவுகளை வழங்குவது நிதிக் கணக்கீடாகும் அதில் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் தத்துவங்கள் விதிகள் பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும்.
முகாமை கணக்கீடானது உள்ளக கட்சியினரான முகாமைக்கணக்காளருக்குத் தீர்மானம் எடுக்கக்கூடிய தகவல்களை வழங்குவதாகும் இவை மிகவும் விமர்சிக்க கூடிய தன்மை வாய்ந்ததாகும்.

2. கிரயக் கணக்கீடு என்பது, பொருள் அல்லது சேவை என்பவற்றின் கிரயம் தொடர்பான தகவல்களை மட்டுமே வழங்குகிறது. அத்துடன் இது நடப்பு நிதியாண்டிற்கான அண்மித்த தரவுகளை வழங்குகின்றது. முகாமைக் கணக்கீடு உள்ளகத் திட்டமிடல், தீர்மானம் எடுத்தல், கட்டுப்படுத்தல் ஆகியவற்றுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதுடன் விசேட தீர்மானங்களுக்குரிய தரவுகளையும் வழங்குகின்றது.

முகாமைக் கணக்கீட்டின் ஒருபகுதியாகவும் கிரயக் கணக்கீட்டை இனம்காட்டலாம்.

(ஆ)
1. 3
2. 2
3. 1
4. 2

காசுப்பாதீடு

விபரம்	ஜனவரி ரூபா	பெப்ரவரி ரூபா	மார்ச் ரூபா
பெறுவனவு			
விற்பனை	84000	120000	162000
கொடுப்பனவுகள்			
மூலப்பொருள் கொள்வனவு	240000	176000	96000
ஊழியம்	80000	80000	96000
மாறும் மேந்தலை	16000	16000	19200
மாறா மேந்தலை	16000	16000	16000
விற்பனை நிர்வாக செலவு	6000	6000	6000
	358000	294000	233200
தேறிய காசுப் பெறுவனவு	(274000)	(174000)	(71200)
ஆரம்ப மீதி	-	(274000)	(448000)
	(274000)	(448000)	(519200)

விற்பனை மூலம் பெற்றகாசு கணித்தல்

	ஜனவரி		பெப்பிரவரி		மார்ச்
$120000 \times \frac{70}{100}$	84000	$120000 \times \frac{30}{100}$	36000		
		$120000 \times \frac{70}{100}$	84000	$120000 \times \frac{30}{100}$	36000
				$180000 \times \frac{70}{100}$	126000
	84000		120000		162000

கொள்வனவுக்கு கொடுப்பனவு செய்த காசு கணித்தல்

	ஜனவரி		பெப்ரவரி		மார்ச்
8 x 20000	160000		-		-
$20000 \times 8 \times \frac{1}{2}$	80000	$20000 \times 8 \times \frac{1}{2}$	80000		-
		$24000 \times 8 \times \frac{1}{2}$	96000	$24000 \times 8 \times \frac{1}{2}$	96000
	240000		176000		96000

குறிப்பு :
கணக்கின் தரவின் படி ஏப்பிரல் மாதத்துக்கான உற்பத்தி அலகுதரப்படவில்லை எனவெ மார்ச்மாதத்தில் பயன்படுத்திய மூலப்பொருளில் அரைவாசி மட்டும் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டதாக கருதுக.

* * * * *

(4)

(அ) கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.

1. மேந்தலைகள் என்பதால் நீர் விளங்குவது என்ன? பொருத்தமான இரு உதாரணங்களுடன் மேந்தலைகளை வகைப்படுத்துக.

(02 புள்ளிகள்)

2. பின்வரும் தொடர்களை விளக்கி அவை கிரயக் கணக்கீட்டில் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதைக் குறிப்பிடுக.
   1. மேந்தலைகளின் ஒதுக்கீடும் பகிர்வும்
   2. மேந்தலை உறிஞ்சல்

(02 புள்ளிகள்)

(ஆ) கீழ்வரும் கணக்கீட்டு நடைமுறைகள் சரியானவையா? அல்லனவா? எவையேனும் பிழையானவை எனின் அதன் சரியான நடைமுறையை எழுதுக.

1. ஒரு மேந்தலை உறிஞ்சுதல் வீதமானது, மதிப்பிடப்பட்ட மொத்த மேந்தலையை மெய் மொத்த மேந்தலையால் பிரிப்பதன் மூலம் கணிக்கப்படுகிறது

2. தொழிற்சாலை மேந்தலைகள் தீர்மானிக்கப்பட்டபின் மொத்த உற்பத்தி கிரயத்தின் ஒரு பகுதியாக அவை சேர்த்துக் கொள்ளப்படும்.
3. ஏதேனும் உற்பத்திக் கிரயம் நேர்க்கிரயமாக அடையாளம்காண முடியாவிட்டால், அது இலாப நட்டக் கணக்கில் இதர செலவுகளின் கீழ் வரவு வைக்கப்படும்.
4. தொழிற்சாலை வாடகையின் ஒதுக்கீட்டிற்கான மிகப் பொருத்தமான அடிப்படை, நேரடி ஊழிய மணித்தியால அடிப்படையாகும்.

(4 புள்ளிகள்)

(இ) வரையறுக்கப்பட்ட விசித்திரு நிறுவனம் இரண்டு உற்பத்தித் துறைகளையும் ஒரு சேவைத்துறையையும் கொண்டிருக்கிறது. கீழ்வரும் தகவல்கள் அதன் இரு உற்பத்திகளுடன் தொடர்புடையவை.

1. மதிப்பிடப்பட்ட மேந்தலைகளும் தொடர்புறுத்தப்பட்ட செயல் அடிப்படைகளும்.

	மொத்த மேந்தலைகள்	நேரடி ஊழிய மணித்தியாலங்கள்
உற்பத்தித்துறை - A	12000	140
உற்பத்தித்துறை - B	100000	1060
சேவைத்துறை	8000	

2. சேவைத்துறையின் மேந்தலை பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியிருக்கிறது.

துறை	A இற்கு	25%
துறை	B இற்கு	75%

3. இரண்டு உற்பத்திகளின் மெய் அலகுகிரயப் பகுப்பாய்வு பின்வருமாறு

	சேர்ட் ஒன்று	ஃப்ரொக் ஒன்று
நேரடிப்பொருள்	ரூபா 150.00	ரூபா 350.00
நேரடி ஊழியம்	ரூபா 250.00	ரூபா 500.00
நேரடி ஊழிய மணித்தியாளங்கள்		
துறை A	1 மணி	3 மணி
துறை B	3 மணி	2 மணி

தொழிற்சாலை மேந்தலைகள் நேரடி ஊழிய மணித்தியால அடிப்படையில் உறிஞ்சப்பட்டதாகக் கருதவும்.
கீழ்வரும் அடிப்படைகளின் கீழ் (உற்பத்திகள் ஒவ்வொன்றினதும்) மொத்த அலகுக்கான கிரயங்களை கணக்கிடும்படி நீர் கேட்கப்படுகின்றீர்.

1. முழு தொழிற்சாலையொன்றுக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதம்
(4 புள்ளிகள்)
2. தனியான துறைரீதியான மேந்தலை உறிஞ்சல் வீதம்
(4 புள்ளிகள்)
(08 புள்ளிகள் மொத்தம் 16 புள்ளிகள்)

விடை

(4)

(அ) 1. உற்பத்தியிலும், பங்கீடு செய்வதிலும் எழுகின்ற சகல நேரிற் கிரயங்களும் மேந்தலை எனப்படும்.

(உ-ம்) * உற்பத்தி பொது மேந்தலைச் செலவினம் - மின்சாரக்கட்டணம்
* கால அடிப்படையிலான பொதுச் செலவினங்கள் தொழிற்சாலை வாடகை

2. **மேந்தலைகளின் ஒதுக்கீடு**

ஏற்பட்ட மேந்தலைக் கிரய உருப்படிகளில் குறிப்பிட்ட கிரய நிலையத்துக்கென இலகுவாக அடையாளம் காணக்கூடிய மேந்தலை கிரய உருப்படிகளை அக்குறிப்பிட்ட கிரய நிலையங்களுக்கு ஒதுக்ககுதல் அல்லது குறித்த கிரய நிலையத்தின் செலவுகளுடன் நேரடியாக சேர்த்தல் மேந்தலைகளின் ஒதுக்கீடு எனப்படும்.

மேந்தலை பகிர்வு

ஏற்பட்ட மேந்தலைக் கிரய உருபடிகளை குறிப்பிட்ட கிரய நிலையங்களுக்கென இனங்கான முடியாத சந்தர்ப்பத்தில் இம் மேந்தலைக் கிரய உருபடிகளை தொடர்புடைய கிரய நிலையங்களுக்கிடையே மிகவும் பொருத்தமான முறையில் அல்லது அடிப்படையில் சுமத்துதல் மேந்தலைப் பகிர்வு எனப்படும்.

முக்கியத்துவம்

ஏதேனும் காலப் பிரிவு தொடர்பான மேந்தலைகிரய உருப்படியினை ஒரு கிரய நிலையத்தின் முழுக் கிரயத்தையும் மிகவும் பிழையற்ற முறையிலும் செம்மையாகவும் கணிப்பதற்கு ஆகும்.

மேந்தலை உறிஞ்சுதல்

ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டவாறு குறித்த விகிதத்தில் அல்லது முறையில் நேரிற்கிரயம் அனைத்தையும் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு அலகும் பொருத்தமான அடிப்படையில் உள்ளடக்குதல் மேந்தலை உறிஞ்சல் எனப்படும்.

முக்கியத்தவம்

அனைத்து நேரிற் செலவுகளையும் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு அலகிலும் உள்ளடக்கிக்கணிப்பிடுவதாகும். அல்லது கிரய அலகு ஒன்றின் கிரயத்தை சரியான முறையில் கணிப்பிடுவதாகும்.

(ஆ) 1. பிழை - கிரய நிலையத்தில் பாதீடு செய்யப்படும்

$$\frac{\text{பாதிடப்பட்ட பொதுமேந்தலை}}{\text{பாதிடப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை}}$$

2. சரி

3. பிழை - உற்பத்திக் கணக்கில் தொழிற்சாலை மேந்தலைக் கிரயம் என்பதன் கீழ் உள்ளடக்கப்படும்

4. பிழை -தொழிற்சாலை வாடகையானது, தொழிற்சாலையின் நிலப்பரப்பு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

(இ)

	உற்பத்தித்துறை (A)	உற்பத்தித்துறை (B)	சேவைத்துறை (C)
மொத்த மேந்தலை	12000	100000	8000
சேவைத்துறைப் பகிர்வு	2000	6000	(8000)
	14000	106000	-

1. முழுத் தொழிற்சாலை ரீதியான மேந்தலை உறிஞ்சல் வீதம்

$$\frac{\text{மொத்த மேந்தலை}}{\text{மொத்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை}} = \frac{120000}{1200}$$

= 100 ரூபா / ஊழியமணி,

2. ஒவ்வொரு துறைக்குமான உறிஞ்சல் வீதம்

உற்பத்தித்துறை A	உற்பத்தித்தறை B
$\frac{14000}{140}$	$\frac{106000}{1060}$
ரூபா 100 / ஊழியமணி	ரூபா 100 / ஊழியமணி

முழுத்தொழிற்சாலைக்கான வீதம்

	சேட்	சட்டை
நேர்மூலப்பொருள்	150	350
நேர்கூலி	250	500
மூலக்கிரயம்	400	850
தொழிற்சாலை மேந்தலை	(4 x 100) 400	(5 x 100) 500
	800	1350

* ஒவ்வொரு துறைக்கான வீதம்

	சேட்	சட்டை
நேர்மூலப்பொருள்	150	350
நேர்கூலி	250	500
மூலக்கிரயம்	400	850
தொழிற்சாலை மேந்தலை		
A -	(1 x 100) 100	(3 x 100) 300
B -	(3 x 100) 300	(2 x 100) 200
மொத்தக்கிரயம்	800	1350

* * * * *

(5)

(அ) கீழ்வரும் கிரய உருப்படிகள் வேறுபட்ட உற்பத்தி நிறுவனங்களுடன் தொடர்புடையவை.

1. தளபாடத் தொழிற்சாலை ஒன்றினால் அதன் உற்பத்திகளுக்காக உபயோகப்படுத்தப்பட்ட பலகை.
2. தொழிற்சாலை பொறித்தொகுதிகளுக்கான காப்புறுதி.
3. அச்சு நிறுவனமொன்றில் அச்சிடும் ஊழியர்களுக்கான ஊதியங்கள்.
4. சப்பாத்து தயாரிப்புக்காக உபயோகப்படுத்தப்பட்ட தோல்.
5. தொழிற்சாலையைத் துப்பரவுசெய்பவருக்கான ஊதியங்கள்.
6. தொழிற்சாலைப் பொறித்தொகுதியிலான தேய்வுப் பெறுமானம்.
7. அரசாங்க தொழிற்சாலையில் தையல் எந்திரம் இயக்குபவருக்கான ஊதியங்கள்.
8. தொழிற்சாலைப் பொறித்தொகுதியால் நுகரப்படும் மின்சக்தி.

கீழ்வரும் தலைப்புக்களில் அவற்றை வகைப்படுத்துக.

1. நேரடிப் பொருட்கள் கிரயம்
2. நேரடி ஊழிய கிரயம்
3. தொழிற்சாலை மேந்தலைகள்

(வினாவின் இலக்கத்தைத் தெளிவாக எழுதி அதனெதிரே வினாவின் உபபிரிவை எழுதினால் போதுமானது.)

(02 புள்ளிகள்)

(ஆ) கையிருப்புக் கட்டுப்பாட்டு முறைமையின் குறிக்கோள்கள் எவை? கையிருப்புக் கட்டுப்பாடு தொடர்பாக பின்வரும் தொடர்களின் பங்களிப்பை விளக்குக.

1. மறு கட்டளையிடும் மட்டம்
2. இழிவு இருப்பு மட்டம்
3. சிக்கனக் கட்டளை கணியம் / பொருளாதார கட்டளை கணியம் (E.O.Q.)

(02 புள்ளிகள்)

> **ஆசிரியர் குறிப்பு :**
> 5 வது வினாவின் பிரிவு ஆ (3) பொருளாதார கட்டளை கனியம் என்பதற்கு பதிலாக வினாபத்திரத்தில் "பொருளியல் ஒழுங்கு அளவு சார்பு" என்ற பதம் பிரியோகிக்கப்பட்டுள்ளது. அக்குறிப்பிட்ட மொழிப் பிரியோகம் தவறாகும்.

(இ) 1997 மே மாதத்துக்குரிய கையிருப்பு உருப்படிமீதான கொடுக்கல் வாங்கல்கள், உற்பத்தி நிறுவனமொன்றிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

மே 01	-	கையிருப்பு மீதி 300 அலகுகள் (ஒவ்வொருஅலகும் ரூபா4)
மே 03	-	தொழிற்சாலைக்கு 250 அலகுகள் வழங்கப்பட்டன.
மே 05	-	ஒவ்வொன்றும் ரூ. 4.50 வீதம் 500 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டன.
மே 06	-	தொழிற்சாலைக்கு 150 அலகுகள் வழங்கப்பட்டன.
மே 10	-	தொழிற்சாலைக்கு 210 அலகுகள் வழங்கப்பட்டன.
மே 11	-	தொழிற்சாலையிலிருந்து 10 அலகுகள் களஞ்சியசாலைக்கு திருப்பப்பட்டன. (இவை மே 10 இல் கொள்வனவு செய்யப்பட்டவை)
மே 15	-	ஒவ்வொன்றும் ரூபா 5 வீதம் 500 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டன

மே 20 - வழங்குநருக்கு 300 அலகுகள் திருப்பப்பட்டன. (இவை மே 15 இல் கொள்வனவு செய்யப்பட்டவை)

மே 26 - தொழிற்சாலைக்கு 300 அலகுகள் வழங்கப்பட்டன.

முதல்வருதல் முதல்செல்லல் (FIFO) முறையின் கீழ் களஞ்சியப் பேரேட்டுக் கணக்கொன்றைத் தயாரிக்கும்படி நீர் கேட்கப்படுகின்றீர். ஒவ்வொரு பெறுவனவு, வழங்கல் அவற்றின் விலை என்பவற்றை தனித்தனியாக காட்டுவதோடு கொடுக்கல் வாங்கல்களின் பின்பு இருப்பின் பெறுமதியையும் காட்டி பின்வருவனவற்றைக் கணக்கிடுக. (5 புள்ளிகள்)

1. மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் (1புள்ளி)
2. மாதத்தில் பாவிக்கப்பட்ட பொருள்களின் கிரயம் (1புள்ளி)
3. மாத இறுதியில் உள்ள இருப்பின் பெறுமதி (1புள்ளி)

(08 புள்ளிகள்)

(ஈ) வரையறுக்கப்பட்ட சேன செங்கல் உற்பத்தி நிறுவனம் அதன் களிமண் செய்முறைப் பிரிவுக்கு நான்கு பேரை தொழிலில் அமர்த்தியது. 1996 மே மாதத்திற்கான அவர்களது சம்பளப்பட்டியற் கோவையிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு

பெயர்	சம்பளவீதம்	மாதத்தில் வேலைசெய்த மணித்தியாலங்கள்
	ரூபா	ரூபா
ஜீ.ஆரியசேன (மேற்பார்வையாளர்) மாதமொன்றுக்கு	3200	184
எஸ்.சிறிபால மணித்தியாலமொன்றுக்கு	16	160
ஆர்.மித்திரன் மணித்தியாலமொன்றுக்கு	10	80
பி.குணசிங்க மணித்தியாலமொன்றுக்கு	8	196

மேலதிக தகவல்கள்

1. மாதாந்த சாதாரண வேலைநேரம் 160 மணித்தியாலங்கள் ஆகும் ஆனால் ஊழியர்களுக்கு அவர்களது மணித்தியால சம்பளத்தின் 1 1/2 மடங்கு மேலதிக நேரச் சம்பளமாக வழங்கப்பட்டது.
2. ஊழியர் சேமலாப நிதிக்கான (EPF) கொடையாக மொத்தச் சம்பளத்தில் 10% ஊழியர்களாலும் 15% கம்பனியாலும் வழங்கப்பட்டது.

(1) பின்வரும் வடிவமைப்பைக் கொண்டதொரு சம்பளப்பட்டியற் பதிவேட்டை 1996 மே மாதத்துக்காக தயாரிக்கும்படி நீர் வேண்டப்படுகின்றீர்

பெயர்	சம்பாத்தியம்			கழிவு	தேறிய	EPF
	அடிப்படைச் சம்பளம்	மேலதிக நேரக் கொடுப்பனவு	மொத்தச் சம்பளம்	ஊழியர் EPF	சம்பளம்	கம்பனி

(3 புள்ளிகள்)

(2) கம்பனி சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கொன்றைப் பேணுவதாகக் கருதிக்கொண்டு, மொத்தச் சம்பளம், கழிவுகள், தேறிய சம்பளம் ஆகியவற்றை பதிவதற்கு நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்குக. (1 புள்ளி)

(4 புள்ளிகள்)

மொத்தம் 16 புள்ளிகள்)

விடை

(05)

(அ)
1. நேர்மூலப்பொருள் கிரயம்
2. தொழிற்சாலை மேந்தலைக் கிரயம்
3. நேர்கூலிக்கிரயம்
4. நேர்மூலப்பொருள் கிரயம்
5. தொழிற்சாலை மேந்தலை கிரயம்
6. தொழிற்சாலை மேந்தலை கிரயம்
7. நேர்கூலி கிரயம்
8. தொழிற்சாலை மேந்தலை கிரயம்

(ஆ)
1. உற்பத்தியைத் தடையின்றி மேற்கொள்வதற்கு தேவையான பொருட்களை வழங்கல்
2. இருப்புத் தொடர்பான செலவினத்தை (கட்டளை, பேணுதல் செலவு) இழிவு நிலையில் வைத்திருத்தல்
3. இருப்பில் ஈடுபடுத்தப்படும் தொழிற்படுமுதலை உகந்த மட்டத்தில் பேணுதல்

4. இருப்பு கையாளும் போது ஏற்படக்கூடிய இழப்புக்கள் விரயங்களை இழிவு நிலையில் பேணுதல்.

<u>மறுகட்டளையிடும் மட்டம்</u>

மேலதிக சரக்கிருப்பினை பெறுவதற்கு கட்டளையிட வேண்டிய காலத்தில் பேணப்படும் மட்டமாகும். இது இழிவு மட்டத்திற்கு மேலாக எப்பொழுதும் காணப்படும். அதாவது சரக்கிருப்பு கட்டளையிடும் காலத்திற்கும் அவை களஞ்சியத்திற்கு வந்துசேர எடுக்கும் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்திற்கான நுகர்வை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருக்கும். அல்லது இருப்பின்மைச் செலவினை ஏற்படாமல் தடுப்பதற்கு முதன்மைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு பொருட்களை பெறுவதற்காக கட்டளை அனுப்பப்படும் வேளையில் இருக்ககூடிய இருப்பு மட்டமாகும்.

<u>இழிவு மட்டம்</u>

இருப்பு கட்டளையிட்டு பொருட்கள் வந்து சேர எடுக்கும் காலத்தில், பொருட்கள் வந்து சேர எடுக்கும் பிரச்சினைகளை சமாளிக்கும் முகமாக பேணப்படும் இருப்பு ஆகும். இது பாதுகாப்பு மட்டம் எனப்படும். அத்துடன் உடனடி மேலதிக உற்பத்தி தேவையை ஈடு செய்யும் இருப்பாகவும் பயன்படும்.

<u>சிக்கனக் கட்டளைத் தொகை (E.O.Q)</u>

கட்டளையிடல் செலவையும் பேணுதல் செலவையும் இழிவு படுத்தக் கூடியதாக கணிக்கப்பட்ட தொகையாகும். இது நிறுவணத்தால் ஒவ்வொரு கட்டளையின் போதும் கோரப்படும் தொகையாக கொள்ளப்படும்.

களஞ்சிய பேரேடு

திகதி	பெறுவனவு			வழங்குதல்			மீதி		
	அலகு	விலை	பெறுமதி	அலகு	அலகுவிலை	பெறுமதி	அலகு	அலகுவிலை	பெறுமதி
97.05.01	-	-	-	-	-	-	300	4.00	1200
97.05.03	-	-	-	250	4	1000	50	4.00	200
97.05.05	500	4.50	2250	-	-	-	50	4.00	200
							500	4.50	2250
97.05.06	-	-	-	50	4.00	200	-	-	-
				100	4.50	450	400	4.50	1800
97.05.10	-	-	-	210	4.50	945	190	4.50	855
97.05.11	10	450	45	(திரும்பல)		-	200	4.50	900
97.05.15	500	5	2500	-	-	-	200	4.50	900
							500	5.00	2500
97.05.20	(வ.திரும்பல்)		-	300	5	1500	200	4.50	900
							200	5.00	1000
97.05.26	-	-	-	200	4.50	900			
				100	5.00	500	100	5.00	500

1. மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் = (2250 + 2500) = 4750
2. மாதத்தில் பாவிக்கப்பட்ட பொருட்களின் கிரயம் = (1000 + 650 + 945 + 1500 + 1400) = 5495
3. மாத இறுதியில் உள்ள இருப்பின் பெறுமதி = 500

(ஈ)

பெயர்	சம்பாத்தியம்			கழிவு	தேறிய சம்பளம்	கம்பனி ஊழியர் சேமலாப நிதியம்
	அடிப்படை சம்பளம்	மேலதிக நேரக் கொடுப்பனவு	மொத்த சம்பளம்	ஊழியர் சேமலாப நிதியம்		
ஜி. ஆரியசேன	3200	720	3920	392.00	3528.00	588.00
எஸ். சிறிபால	2560	-	2560	256.00	2304.00	384.00
ஆர். மித்திரன்	800	-	800	80.00	720.00	120.00
பி. குணசிங்க	1280	432	1712	17120	1540.80	256.80
			8992	899.20	8092.80	1348.80

பொதுநாட்குறிப்பு

விபரம்	வரவு	செலவு
சம்பளம்	8992	
சம்பளக்கட்டுபாடு கணக்கு		8992
(மொத்த சம்பளத்திற்கான பதிவு)		
சம்பளக் கட்டுப்பாட்டு கணக்கு	899.20	
ஊழியர் சேமலாப நிதி		899.20
(உழியர்களிடம் குறைத்துக்கொள்ளப்பட்ட ஊழியசேமலாப நிதியைப் பயன்படுத்தல்)		
ஊழியர் சேமலாப நிதியச் செலவினம்	1348.80	
ஊழியர் சேமலாப நிதி		1348.80
(நிறுவனத்தக்குரிய ஊழியர் சேமலாப நிதிச் செலவினை பதிவு செய்தல்)		

* * * * *

(6)

(அ) லக்கி விளையாட்டுக் கழகத்தின் 1996.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுவனவுகள், கொடுப்பனவுகள் கணக்கிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட அங்கத்துவ சந்தா வரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

அங்கத்துவ சந்தாப்பணம்

	ரூபா
1995.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	2520
1996.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	68100
1997.03.31 இல் முடிவடைந்த ஆண்டக்கானது	3330

பிறதகவல்கள்

1. கழகமானது பெறுகின்ற சந்தாப் பணங்களுக்கு அவற்றைப் பெற்றபின்பே கணக்கீடு செய்யும் கொள்கையைக் கொண்டள்ளது.

2. 1996.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான சந்தாப்பணம் ரூபா 4200, 1995 ஜனவரியிலே பெற்றுக்கொள்ளப்பட்டது. ரூபா 3000 சந்தாப்பணம் இதுவரையும் பெறப்படவில்லை.

பின்வருவனவற்றைத் தயாரிக்கும்படி நீர் கேட்கப்படுகின்றீர்.

1. சந்தாப்பணக் கணக்கு (3 1/2 புள்ளிகள்)
2. "சந்தாப்பணங்கள் பெறப்பட்ட பின்பு மட்டுமே அவை கணக்கீடு செய்யப்படும்" என்ற கொள்கைக்காக தளர்த்தப்படுகிற கணக்கீட்டு எண்ணக்கரு பற்றிக் குறிப்பிடுக. (1/2 புள்ளி)

(04 புள்ளிகள்)

(ஆ) சுபுன் விளையாட்டுக் கழகத்துடன் தொடர்புடைய 1996.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வரவு செலவுக் கணக்கு

	ரூபா		ரூபா
சம்பளமும் கூலியும்	12000	நுழைவுக் கட்டணம்	8200
மின்சாரம்	6500	சந்தாப்பணம்	35600
காப்புறுதி	1000	மதுபானச்சாலை வியாபார இலாபம்	6000
கணக்காய்வுக் கட்டணம்	500		
பெறுமானத் தேய்வு	900		
மிகை	28900		
	49800		49800

பெறுவனக் கொடுப்பனவுக் கணக்கு

	ரூபா		ரூபா
மீதி	5200	சம்பளமும் கூலிகளும்	11000
நுழைவுக் கட்டணம்	8200	மின்சாரம்	6000
சந்தா 96.03.31	35600	காப்புறுதி	2100
97.03.31	5100	மதுபானசாலைக்கு கடன்கொடுத்தோர்	42000
மதுபானச்சாலை விற்பனை	62000	மதுபானச் சாலைச் செலவுகள்	1500
		மீதி	53500
	116100		116100

குறிப்புகள்.

1. 1995.03.31 இல் உள்ளபடி சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமாறு

	ரூபா
நிலையான சொத்துக்கள் (தேறிய)	25000
மதுபானச்சாலை கையிருப்பு	4200
மதுபானச்சாலை கடன்கொடுத்தோர்	3100

2. மதுபானச்சாலைக் கையிருப்பு 1996.03.31 இல் ரூபா 5600 ஆக மதிக்கப்பட்டது.

பின்வருவனவற்றைத் தயாரிக்கும்படி நீர் கேட்கப்படுகின்றிர்.

1. மதுபான வியாபாரக்கணக்கு (3புள்ளிகள்)
2. 1996.03.31 ஆந் திகதியன்று உள்ளபடி ஐந்தொகை (08 புள்ளிகள்)

(இ) வரையறுக்கப்பட்ட சனத் நிறுவனம் கண்டியில் ஒரு முகவரைக்கொண்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் 1996.12.31 உடன் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்புடையவை.

(1) 1996.01.01 இல் ரூபா 60000 கிரயமான பண்டங்கள் ஒப்படையாக அனுப்பப்பட்டன. போக்குவரத்து கட்டணங்கள் ரூபா 4500 உம் காப்புறுதி ரூபா 2100 உம் வரையறுக்கப்பட்ட சனத் நிறுவனத்தால் செலுத்தப்பட்டன.

(2) 1996.12.31 இல் முகவரால் அனுப்பப்பட்ட விற்பனைக் கணக்கில்,

விற்பனை	ரூ. 68750
தரகு	ரூ. 4875
விற்பனைச் செலவுகள்	ரூ. 4200

எனக் காட்டப்பட்டிருந்தது.

அதே தினத்தில் ரூபா 50000 இற்கான காசோலையொன்று பெறப்பட்டது.

3. 1996.12.31 இல் அப்பொருட்களில் 1/4 பங்கு விற்கப்படாமல் இருந்தன.

பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகின்றீர்

1. ஒப்படைக் கணக்கு (2 1/2 புள்ளிகள்)

2. வரையறுக்கப்பட்ட சனத் நிறுவனத்தின் இலாப நட்டக் கணக்கிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டவையும் ஐந்தொகையும் (1 1/2 புள்ளிகள்)

(04 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

விடை

(06)

(அ)

சந்தாக் கணக்கு

	ரூபா		ரூபா
வருமான செலவுக் கணக்கு (68100 + 4200 + 2520)	74820	மீதி வந்தது (முற்பணம்)	4200
மீதிசென்றது (முற்பணம்)	3330	கொள்ளல்கொடுத்தல் (2520 + 68100 + 3330)	73950
	78150		78150

2. கைத்தேறிய / முன்னெச்சரிக்கை / அட்டுறு எண்ணக்கரு

(ஆ) **சுபன் விளையாட்டு கழகத்தின் 1996 3. 31முடிவடைந்த ஆண்டுக்குரிய மதுபானசாலையின் வியாபாரக் கணக்கு**

95.4.1 இருப்பு	4200	விற்பனை	62000
கொள்வனவு *	55900		
	60100		
கழி			
96.03.31 இருப்பு	(5600)		
விற்பனை கிரயம்	54500		
மதுபானசாலை செலவு	1500		
வியாபார இலாபம்	6000		
	62000		62000

குறிப்பு :
வியாபாரக் கணக்கை சமப்படுத்துவதன் மூலம் கொள்வனவானது பெறப்பட்டதாகும்.

2 சுபன் விளையாட்டு கழகம்

1996.03.31 இல் ஐந்தொகை

திரண்ட நிதி95.01.01 மீதி *		31300	நிலையா சொத்துக்கள்		24100
கூட்டுக :			(25000 - 900)		
செலவிலும் கூடிய வருமானம்		28900	நடைமுறை சொத்தக்கள்		
		60200	மதுபானசாலை இருப்பு	5600	
			முற்பண காப்புறுதி	1100	
			காசு	53500	60200
நடைமுறை பொறுப்புக்கள்					
மதுபானசாலை					
கடன்கொடுனர் **	17000				
அட்டுறு சம்பளம்	1000				
அட்டுறு மின்சாரம்	500				
அட்டுறு கணக்காய்வு	500				
முற்பணசந்தா	5100	24100			
		84300			84300

குறிப்பு :

* திரண்ட நிதியானது ஐந்தொகையை சமப்படுத்துவதன் மூலமே பெறப்பட்டதாகம்.

** கடன்கொடுத்தோர் கணக்கை தயாரிப்பதன் மூலமே கடன்கொடுத்தோர் மீதி பெறப்பட்டதாகும்.

செய்கை

கடன்கொடுத்தோர் கணக்கு

காசு	42000	மீதி வந்தது	3100
மீதி சென்றது	17000	கொள்வனவு	55900
	59000		59000
		மீதி சென்றது	17000

(இ)

ஒப்படைக் கணக்கு

	ரூபா		ரூபா	ரூபா
ஒப்படை சரக்கு கணக்கு	60000	விற்பனை		68750
காசு (போக்குவரத்து)	4500			
காசு (காப்புறுதி)	2100	இருப்பு கிரயம்	15000	
ஒப்படை கொள்வோன்		செலவு	1650	16650
விற்பனைச் செலவு	4200			
தரகு	4875			
ஒப்படை இலாபம்	9725			
	85400			85400

2. இலாப நட்டக் கணக்கு

		ரூபா
	ஒப்படை இலாபம்	9725

31.12.96 இல் ஐந்தொகை

		ரூபா
	நடைமுறைச் சொத்து	
	ஒப்படை இருப்பு	16650
	ஒப்படை கொள்வோன்	9625
	68750 - (4875 + 4200 + 50000)	

* * * * *
* * *
* *
*

Brilliant Institute
136, Sangamitha Mawatha, Colombo - 13.
Telephone : 347728

Mod Study Centre
Welawatha, Colombo - 6.
Telephone : 593334

ஆசிரியரின் நூல்கள்

அலகு – 1	–	திருத்திய மூன்றாம் பதிப்பு ஒற்றைப்பதிவும், தீயழிவும்
அலகு – 2	–	வழுக்களைத் திருத்துதலும் தொங்கல் கணக்கும்
அலகு – 3	–	இலாப நோக்கற்ற நிறுவனங்களின் முடிவுக் கணக்குகள் (2ம் பதிப்பு)
அலகு – 4	–	கட்டுப்பாட்டு கணக்கும் கணக்கீட்டு சமன்பாடுகளும்
அலகு – 5	–	ஒப்படை கணக்கும் வங்கி இணக்க கூற்றும்
அலகு – 6	–	கிரயக்கணக்கீடு
அலகு – 7	–	முகாமைக்கணக்கீடு
விசேட பதிப்பு	–	1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் க. பொ. த உயர்தர பரீட்சை (புதிய பாடத்திட்டம்) வினாவிடை

Admiral Graphics
Printing & Typesetting
No : 403 1/1, Wellawatta. Colombo - 6.